வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ஈழநாடு




மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram. money transfer — மனிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : eelanaduweekly@gmail.com | மலர் : 06 | 03.06.2025 செவ்வாய்க்கிழமை | இதழ் : 154 | பக்கங்கள் : 12

# தமிழ் மக்கள் விடுதலை கருதி ஓரணியாக செயல்படுவோம்!

## 'சைக்கிள்' - 'சங்கு' நேற்று உடன்பாடு

யாழ்ப்பாணம், ஜூன் 03

**எதிர்காலத்தில் தமிழ் மக்களின் விடுதலை கருதி ஓரணியாகச் செயல்படுவோம் என்பதனையும் வெளிப்படுத்துகின்றோம் என தமிழ் தேசிய பேரவை மற்றும் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி ஆகியவை நேற்று புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்து இட்டுள்ளன.**



தமிழ் தேசிய பேரவை மற்றும் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி ஆகிய தரப்புக்களிடையே கொள்கை ரீதியான இணக்கத்தை ஏற்படுத்தும் ஒப்பந்தமொன்று நேற்று திங்கட்கிழமை யாழ்ப்பாணத்தில் கைச்சாத்திடப்பட்டது.

அந்த ஒப்பந்தத்தில், சுதந்திர இலங்கைத் தீவில் கடந்த 77 ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழர் தேசம் தனது அரசியல் அபிலாசைகளை திருப்திப்படுத்தும் விதத்திலும் தன்னுடைய தனித்துவம், பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்கிலும் வடக்கு - கிழக்கு மாகாணங்களை உள்ளடக்கிய தனது மரபுவழித் தாயகத்தில் ஒரு தனியான தேசம் என்ற அடிப்படையில் தனது பிறப்புரிமையான சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தனது விவகாரங்களைத் தானே கையாளக்கூடிய விதத்திலும் தனது சுதந்திரத்தை நிலை நிறுத்தும் வகையிலும் பூரண பொறுப்பு

11

# கொழும்பு - யாழ். இடையே மீண்டும் விமான சேவை!

கொழும்பு, ஜூன் 03

இரண்டு வருடங்களின் பின்னர், கொழும்பு இரத்மலானை மற்றும் யாழ்ப்பாணம் இடையிலான சேவை நேற்று முதல் வழமைக்கு திரும்பியுள்ளது.

தகுதிகாண் விமான சேவை நேற்று டேவிட் பீரிஸ் விமான சேவை நிறுவனத்தால் முன்னெடுக்கப்பட்டது.

2023 ஆம் ஆண்டுடன் இடைநிறுத்தபட்ட

11

# கொழும்பு மாநகர சபையை அரசு பணம் வழங்கி கைப்பற்ற முயற்சி!

கொழும்பு, ஜூன் 03

ஊழலை இல்லாதொழிப்பதாக குறிப்பிட்டுக் கொண்டு ஆட்சிக்கு வந்த தேசிய மக்கள் சக்தி, உறுப்பினர்களை விலைக்கு வாங்கி கொழும்பு மாநகர சபையில் ஆட்சி அமைக்க முயற்சிக்கிறது. ஐக்கிய மக்கள் சக்தி, ஐக்கிய தேசியக் கட்சி ஆகிய அரசியல் கட்சிகளின் மேயர்களுக்கு நாம் ஒத்துழைப்பு வழங்கப் போவதில்லை என்று பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

11

# எரிபொருளில் கிடைக்கும் இலாபம் யாருடைய சட்டைப் பைகளுக்குள்?

## மொட்டு கட்சி கேள்வி



கொழும்பு, ஜூன் 03

உலக சந்தையில் எரிபொருள் விலை குறைவடைந்துள்ள போதிலும், நமது நாட்டில் எவ்வித விலை திருத்தங்களும் மேற்கொள்ளப்படவில்லை. அன்று எரிபொருளால் கிடைத்த இலாபம் தேசிய மக்கள் சக்தி கூறியதைப் போன்று காஞ்சன விஜயசேகரவின் சட்டைப் பைகளுக்குள்

11

## சீரற்ற காலநிலை:

# 1,469 பேர் பாதிப்பு

கொழும்பு, ஜூன் 03

நாட்டில் ஏற்பட்ட சீரற்ற வானிலை காரணமாக 3,064 குடும்பங்களைச் சேர்ந்த 11,469 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

பலத்த மழை மற்றும் காற்று காரணமாக 13 மாவட்டங்களைச் சேர்ந்த மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று

11

# அரியாலை மனித புதைகுழியில் இதுவரை 5 மனித எலும்புக்கூடுகள் அடையாளம்!

யாழ்ப்பாணம், ஜூன் 03

அரியாலை மனிதப் புதைகுழியில் இதுவரை 5 மனித எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

அரியாலை, சித்துப்பாத்தி மயானத்தில் ஒரு குழியில் மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்ட நிலையில் நீதிமன்ற உத்தரவுக்கமைய அகழ்வுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.



ஆரம்பத்தில் இரண்டு எலும்புக்கூடுகள் கண்டுகொள்ளப்பட்டதை அடுத்து நேற்று அகழ்வு பணிகள் மீண்டும் முன்னெடுக்கப்பட்டன. நேற்றைய அகழ்வு பணியுடன் 5 எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

இதேநேரம், மேலும் பல எலும்புக்கூடுகள் இருப்பதற்கான சாத்தியக்கூறுகள் தென்படுகின்றன என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. (அ)

# வடக்கு - கிழக்கு மாகாணங்களில் கண்ணிவெடி அகற்ற ஜப்பான் ஆதரவு

கொழும்பு, ஜூன் 03

இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மனிதாபிமான கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கைகளுக்கு தனது ஆதரவை வழங்குவதற்காக மக் மற்றும் ஹலோ ட்ரஸ்டுடன் இணைந்து இந்த புதிய இரண்டு திட்டங்களுக்கும் மொத்தமாக ரூ. 270 மில்லியனை ஜப்பான் அரசாங்கம் வழங்கியுள்ளது.

2002ஆம் ஆண்டு முதல் இலங்கையில் கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கைகளுக்கு ஜப்பான் நன்கொடை அளித்து வருகிறது, மேலும், ஜப்பானின் மொத்த உதவி தொகை 47 மில்லியன் அமெரிக்க டொலர்களைத் தாண்டியுள்ளது.

11

# பாலி ஆற்று திட்டத்தை அரசு கைவிடவில்லை!

## கடற்றொழில் அமைச்சர் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஜூன் 03

யாழ்ப்பாண குடிதண்ணீர் தேவைக்காக மேற்கொள்ளப்பட்ட திட்டங்களில் ஒன்றான பாலி ஆற்றுத் திட்டத்தை எமது அரசாங்கம் இன்னும் கைவிடவில்லை என கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

பாலி ஆற்றுத் திட்டத்துக்காக கடந்த அரசாங்கத்தில் முன்னெடுக்கப்பட்ட வேலை திட்டங்கள் நிறுத்தப்பட்டுள்ளதா என வினவியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

11

# தேர்தல் ஆணையத்தின் வர்த்தமானி அரசின் பலவந்தப் போக்குக்கு பதிலடி!

## ஐக்கிய மக்கள் சக்தி சாடல்



கொழும்பு, ஜூன் 03

பெரும்பான்மை இல்லாவிட்டாலும் சகல உள்ளூராட்சி மன்றங்களிலும் ஆட்சியமைப்போம் என்று அரசாங்கம் ஆணவப் பேச்சு பேசியது. தேர்தல் ஆணைக்குழு வெளியிட்டுள்ள வர்த்தமானி அறிவித்தல், அரசாங்கத்தின் பலவந்த போக்குக்கு பதிலடியாகும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ். எம். மரிக்கார் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார்.

11

# பதவி ஆசை பிடித்துத் திரியும் தமிழ் தேசிய அரசியல்வாதிகள்

## வர்ணகுலசிங்கம் காட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 03

வடக்கில் பதவி ஆசை பிடித்துத் தமிழ் அரசியல்வாதிகள் திரிவதாக வடக்கு மீனவர் சங்க பிரதிநிதி நா. வர்ணகுலசிங்கம் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரைச்சி பிரதேச சபை மக்கள் பிரதிநிதிகள் சபை பதவியேற்பு



கிளிநொச்சி, ஜூன் 03

கரைச்சி பிரதேச சபையின் மக்கள் பிரதிநிதிகள் சபை, தவிசாளர் அருணாசலம் வேழமாலிகிதன் தலைமையில் நேற்று பதவியேற்றுக் கொண்டது.

கிளிநொச்சி நகர சித்திவிநாயகர் ஆலயத்தில் நடைபெற்ற மத வழிபாடுகளை தொடர்ந்து, சர்வமதத் தலைவர்களின் ஆசியுடன், கரைச்சி பிரதேச சபையின் செயலாளர் தங்கபாண்டி ஞானராஜ் தலைமையில் சம்பிரதாயபூர்வ நிகழ்வுகள் நேற்று காலை, சபையின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றன.

இதன்போது பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற குழுத் தலைவருமான சிவஞானம் சிறீதரன், கிளிநொச்சி மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பரமானந்தம் சத்தியராகவன், வடக்கு மாகாண முன்னாள் கல்வி அமைச்சர் தம்பிராஜா குருகுலராஜா, வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் பசுபதி அரியரத்தினம், பூநகரி பிரதேச சபையின் தவிசாளர் சிவகுமாரன் சிறீரஞ்சன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

இந்நிகழ்வில், புதிய உபதவிசாளர் புஸ்பநாதன் சிவகுமார், தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்கள், மேனாள் உறுப்பினர்கள், சமூகமட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள், சபையின் பணிக்குழாமினர, ஆதரவாளர்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)



# பூநகரி பிரதேச சபை கன்னி அமர்வு நேற்று

கிளிநொச்சி, ஜூன் 03

கிளிநாச்சி பூநகரி பிரதேச சபையின் கன்னி அமர்வு நேற்று சர்வ மத வழிபாடுகளுடன் நடைபெற்றது.

பூநகரி வாடியடியில் அமைந்துள்ள முனியப்பர் ஆலயத்தில் நடைபெற்ற விசேட பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து, பூநகரி வாடியடி அடைக்கல மாதா தேவாலயத்திலும், வழிபாடுகள் நடைபெற்றன.

அதன் பின்னர் முதன்மை விருந்தினர், தவிசாளர் மற்றும் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டு வரவேற்கப்பட்டதை அடுத்து சபை அமர்வு ஆரம்பமானது.

இலங்கை தமிழ் அரசு கட்சி சார்பில் பொன்னாவெளி வட்டாரத்தில் வெற்றி பெற்ற சிவகுமார் சிறீரஞ்சன் பூநகரி பிரதேச சபை தவிசாளராகவும், நல்லூர் வட்டாரத்தில் வெற்றி பெற்ற குலவீரசிங்கம் குணலட்சுமி உப தவிசாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

உள்ளூராட்சி மன்ற தேர்தலில் தமிழ் அரசுக் கட்சியானது அறுதிப் பெரும்பான்மையுடன், வடக்கு மாகாணத்தில் நேற்று முதலாவது அமர்வை ஏற்பாடு செய்திருந்தது.

இதில் பூநகரி பிரதேச சபை செயலாளர், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் மற்றும் கட்சி ஆதரவாளர்கள் பங்கேற்றனர். (அ)

# வவுனியா புதூர் நாகதம்பிரான் ஆலய பிரதான வீதி காபெற் வீதியாக மாற்றம்

வவுனியா, ஜூன் 03

வரலாற்று சிறப்பு மிக்க, வவுனியா புதூர் நாகதம்பிரான் ஆலய பிரதான வீதியை காபெற் வீதியாக மாற்றியமைக்கும் பணி நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்கவின் வழிகாட்டுதலில், மாகாணம் குறித்த அபிவிருத்தி நிதியின் கீழ், 24 மில்லியன் ரூபாய் செலவில், 1.75 கிலோ மீற்றர் நீளமான வீதி காபெற் வீதியாகவும், மீதமாக உள்ள 4.35 கிலோ மீற்றர் வீதி, கிரவல் வீதியாகவும் திருத்தம் செய்யப்படவுள்ளது.

இதன்போது, தேசிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ம. ஜெகதீஸ்வரன் பங்கேற்று, பணிகளை ஆரம்பித்து வைத்தார்.

இந்த நிகழ்வில், வீதி அபிவிருத்தி அதிகார சபை உயர் அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், பிரதேச மக்கள் என பலர் பங்கேற்றனர். (அ)

# யாழ்.நகரத்தின் வளர்ச்சி வரலாறு நூல் வெளியீட்டு விழா புதனன்று

யாழ்ப்பாணம், ஜூன் 03

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் புவியியல் துறை நடத்தும் விக்கிப்பீடியா மயூரநாதனின் எழுத்தில் யாழ்ப்பாண நகரத்தின் வளர்ச்சி வரலாறு (1621 - 1948) என்னும் நூல் வெளியீட்டு விழா நாளை புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

கலைப்பீடாதிபதி பேராசிரியர் சிவசுப்பிரமணியம் ரகுராம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராக துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராசா கலந்து சிறப்பிக்க இருக்கிறார். நூலின் அறிமுக உரையை யாழ். பல்கலைக்கழக புவியியல் துறை தலைவர் , சிரேஷ்ட விரிவுரையாளர் நாகமுத்து பிரதீபராஜா நிகழ்த்தவுள்ளார். தொடர்ந்து மதிப்பீட்டுரைகளை யாழ். பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளையும் யாழ். பல்கலைக் கழக நுண்கலைத்துறையைச் சேர்ந்த பேராசிரியர் தாமோதரன்பிள்ளை சனார்த்தனனும் படைப்பாளியும் அரசியல் விமர்சகருமான மஹாதேவா நிலாந்தனும் ஆற்றவுள்ளனர். நூலாசிரியரான கட்டடக் கலைஞர் இரத்தினவேலுப்பிள்ளை மயூரநாதனின் ஏற்புரையோடு நிகழ்வு நிறைவு பெறும். நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு யாழ்ப் பாணப் பல்கலைக் கழகத்தின் புவியியல் துறை கேட்டுக் கொள்கிறது. (அ)

# லொத்தர் சபையின் முன்னாள் பணிப்பாளர் மீண்டும் மறியலில்

கொழும்பு, ஜூன் 03

தேசிய லொத்தர் சபையின் முன்னாள் பணிப்பாளர் துசித ஹல்லொலுவவை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

கோட்டை நீதிவான் நீதிமன்றம் நேற்று திங்கட்கிழமை இந்த உத்தரவைப் பிறப்பித்தது.

இதன்படி, எதிர்வரும் 04 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தேசிய லொத்தர் சபைக்குச் சொந்தமான அரச சொத்துகளை முறைகேடாகப் பயன்படுத்தியதாக அவருக்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. (அ)

# நாட்டின் விவசாய துறைக்கு சீனா முழுமையான ஆதரவு

கொழும்பு, ஜூன் 03

இலங்கைக்கு விவசாயம் மற்றும் அதனுடன் தொடர்புடைய நடவடிக்கைகளுக்குத் தேவையான உதவிகளை வழங்க சீனா ஒப்புக்கொண்டுள்ளது.

விவசாயத் துறையில் முதலீடு செய்யத் தயாராக இருப்பதாகவும் சீனா தெரிவித்துள்ளது.

சீனா - இலங்கை விவசாய நடவடிக்கைகள் குறித்த சிறப்பு கலந்துரையாடல் விவசாய திணைக்களத்தில் நடைபெற்றது.

இரு நாடுகளின் விவசாயத் துறை தொடர்பான அதிகாரிகள் இந்த கலந்துரையாடலில் பங்கேற்றனர்.

தற்போதைய அரசாங்கம் உணவுப் பாதுகாப்பில் கவனம் செலுத்துவதன் மூலம் விவசாயத் தொழிலை உருவாக்குவதில் அதிக கவனம் செலுத்தியுள்ளதாக விவசாய திணைக்களத்தின் புதிய பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார். (அ)

# கோவிட் தொற்று குறித்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறு அறிவுறுத்தல்

கொழும்பு, ஜூன் 03

இலங்கையில் இரண்டு புதிய ஒமிக்ரோன் துணை வகைகள் கண்டறியப்பட்டதை தொடர்ந்து, கண்காணிப்பு நடவடிக்கைளை சுகாதாரத் துறை தீவிரப்படுத்தியுள்ளது.

கோவிட் தொற்றால் எந்தவொரு அதிகரிப்பும் பதிவாகாத போதிலும் சர்வதேச விமான நிலையங்கள், துறைமுகங்களில் கண்காணிப்பை அதிகரிப்பது குறித்து அரசாங்கம் பரிசீலித்து வருகிறது.

பொது மக்கள் அச்சம் கொள்ளத் தேவை இல்லையென்றாலும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறு நோயெதிர்ப்பு நிபுணர் பேராசிரியர் சந்திமா ஜீவந்தரா தெரிவித்துள்ளார்.

முகக் கவசம் அணிதல், அடிக்கடி கைகளைக் கழுவுதல் மற்றும் சுகாதார அமைச்சகத்தின் பொது சுகாதார ஆலோசனையைப் பின்பற்றுமாறும் அறிவுறுத்தியுள்ளார்.

கோவிட் தொற்றின் அதிகரிப்பை கையாள்வதற்கு நாடு முழுவதும் உள்ள வைத்திய சாலைகள் தயாராக உள்ளதென சுகாதார அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

நிலைமை மோசமடைந்தால் போதியளவான தனிமைப்படுத்தல் பிரிவுகள், மருத்துவ பொருட்கள் மற்றும் பயிற்சி பெற்ற ஊழியர்களுடன் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# ரூபாயின் பெறுமதி உயர்வடைந்தது

கொழும்பு, ஜூன் 03

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் பெறுமதி கடந்த வெள்ளிக்கிழமையுடன் ஒப்பிடுகையின் நேற்று திங்கட்கிழமை சற்று வலுவடைந்துள்ளது.

இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள நாணய மாற்று வீத அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, டொலர் ஒன்றின் கொள்வனவு விலை 295 ரூபாய் 35 சதமாக பதிவாகியுள்ளது.

அத்துடன், விற்பனை விலை 303 ரூபாய் 74 சதமாக பதிவாகியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# மழையுடனான வானிலை குறைவடையும் சாத்தியம்

கொழும்பு, ஜூன் 03

நேற்று முதல் மழையுடனான வானிலை குறைவடையும் சாத்தியம் காணப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

மேல், சப்ரகமுவ, மத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் காலி, மாத்தறை மாவட்டங்களிலும் தொடர்ந்தும் இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் கடலுக்கு செல்வதை தவிர்க்குமாறு கடல் சார் ஊழியர்களுக்கும் மீனவர்களுக்கும் தொடர்ந்தும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

சீரற்ற வானிலை காரணமாக 14 மாவட்டங்களில் பாதிப்புகள் பதிவாகியுள்ளன என்று அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

2,751 குடும்பங்களைச் சேர்ந்த 10,270 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அனர்த்தங்களால் இதுவரை 18 பேர் காயமடைந்துள்ளனர். 2,710 வீடுகளும் சேதமடைந்துள்ளன.

இந்நிலையில் இழப்பீடுகளுக்கான நட்டஈடுகளை வழங்கும் நடவடிக்கைகளை மாவட்ட செயலகம் மற்றும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் என்பன முன்னெடுத்துள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
03.06.2025 செவ்வாய்க்கிழமை
விசுவாவசு வருடம், வைகாசி 20

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# ஒரு புதிய அரசியல் கூட்டணி

அரசியலில் விருப்பங்களும் யாதார்த்தமும் எப்போதுமே ஒன்றுக்கொன்று முரண்பாடானதுதான். ஏனெனில், விருப்பங்கள் உயர்வானதாகவும் யதார்த்தமோ தவிர்க்க முடியாததாகவும் இருக்கும். இறுதியில் விருப்பமா யதார்த்தமா என்று வருகின்றபோது, யதார்த்தம் விருப்பத்தைத் தோற்கடிக்கும். அரசியலில் எவரெல்லாம் இந்த உண்மையை நிராகரித்துச் செயல்பட எத்தனிக்கின்றனரோ, அவர்கள் பரிதாமாகத் தோல்வியை சந்திப்பர்.

2009இல், முள்ளிவாய்க்காலில் ஈழப்போர் தோல்வியை பதிவு செய்திருந்தது. அதன் பின்னரான கடந்த பதினைந்து வருட கால அரசியலில் பலவாறான அரசியல் விவாதங்களும் உள்சண்டைகளும் இடம்பெற்றன. ஒருவர்மீது மற்றவர் துரோகி, ஒட்டுக் குழு, இந்திய முகவர் என்னும் வசை சொற்களை தாராளமாக வீசினர். இதில் எப்போதும் முன்னணி வகித்தவர்கள், முன்னணியினர்தான். ஆனால், தமிழ்த் தேசிய அரசியலை பிரதிநிதித்துவம் செய்வதாகக் கூறிக்கொண்ட எந்தவொரு கட்சியாலும் எந்தவொரு முன்னேற்றகரமான நகர்வுகளையும் இதுவரையில் நிரூபிக்க முடியவில்லை.

இந்தக் காலப்பகுதியில் அரசியல் கூட்டணிகளை உருவாக்கும் பலவாறான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால், எந்தவொரு முயற்சியும் வெற்றியளிக்கவில்லை. இந்தக் காலத்தில் சிவில் சமூகம் என்னும் அடிப்படையிலும் கருத்துருவாக்கிகள் என்னும் அடிப்படையிலும் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் எவையுமே வெற்றியளிக்கவில்லை.

இவ்வாறானதொரு பின்னணியில்தான், எந்தவொரு வெளித்தரப்பின் முயற்சியும் இல்லாமல், தாங்களாகவே ஒரு கூட்டணியை சாத்தியப்படுத்தியிருக்கின்றனர். இதனை வரவேற்கத்தான் வேண்டும். ஒரு வேளை, கருத்துருவாக்கிகள், சிவில் சமூக அமையம் போன்ற பெயர்களில் இயங்குபவர்களின் தலையீடுகள் இல்லாமல் இருந்ததும் இதற்கொரு காரணமாக இருக்கலாம். ஏனெனில், தமிழ் பொது வேட்பாளர் விடயத்தில் ஏற்பட்ட முயற்சியை சிவில் சமூகமாகவும் கருத்துருவாக்கிகளாகவும் தங்களை அடையாளப்படுத்தியவர்களே தோற்கடித்தனர். இதனை அரசியல் கட்சிகள் ஓர் அனுபவமாகக் கொண்டிருக்கலாம்.

இவ்வாறானதொரு பின்புலத்தில்தான், எதிரும் புதிருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசியப் பேரவையும் முன்னாள் ஆயுத இயக்கங்களை முற்றிலுமாகக் கொண்டிருக்கும் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணிக்கும் இடையில் ஒரு புரிந்துணர்வு சாத்தியப்பட்டிருக்கின்றது.

அண்மைக்காலத்தில், ஏற்பட்ட அரசியல் கூட்டணிகளில் இது சற்று வித்தியாசமானதும் ஒப்பீட்டு அடிப்படையில் பரந்தளவிலான கட்சிகளை ஓரிடத்துக்கு கொண்டு வந்திருக்கும் ஒரு முக்கிய நகர்வாகும். அந்த வகையில் இது ஒரு முன்னேற்றகரமான கூட்டணியாகும். ஆனால், இந்தக் கூட்டின் அடுத்த கட்டம் எவ்வாறு அமையும் என்பதில் கேள்விகள் உண்டு. இவர்கள் எதிர்காலத்தில் தேர்தல்களை ஒன்றுபட்டு எதிர்கொள்வார்களா? அவ்வாறு எதிர்கொள்ள முற்படும் போது இவர்களுக்கிடையில் எவ்வாறான இணக்கப்பாடு ஏற்படும், ஏற்படுமா என்பதெல்லாம் பதில் தேட வேண்டிய கேள்விகளாகவே இருக்கின்றன.

ஆனால், இங்கு கவனிக் வேண்டிய விடயம் ஒன்று உண்டு அதாவது, கடந்த காலத்தில் பலர் வலிந்து முயற்சிகளை மேற்கொண்டபோது சாத்தியப்படாத இவ்வாறானதோர் அரசியல் கூட்டணி இப்போது எவ்வாறு சாத்தியப்பட்டது? உண்மையில், இரண்டு காரணிகளால்தான் இவ்வாறானதொரு கூட்டணி சாத்தியப்பட்டிருக்கின்றது. அதவாது, ஒன்று, தேசிய மக்கள் சக்தி கடந்த பாராளுமன்றத் தேர்தலில் வடக்கு - கிழக்கில் பெற்றுக்கொண்ட வெற்றியானது, தமிழ்த் தேசிய கட்சிகளை விழிப்படையச் செய்திருக்கின்றது - தங்களின் வறட்டுத் தனங்களை கடந்து சிந்திக்க வேண்டிய நிர்பந்தத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. அடுத்தது, இவ்வாறான அனுபவங்களின் பின்னரும் கூட, இலங்கை தமிழரசு கட்சி ஏனைய தமிழ் கட்சிகளுடன் விட்டுக் கொடுப்புடன் கூடிய கூட்டணிக்கு தயாராக இருக்கவில்லை, தொடர்ந்தும் வரட்டுத்தனமான பிடிவாத மனோபாவத்துடன் இருந்தமை. முஸ்லிம் காங்கிசுடன் நெருக்கத்தை காண்பித்த அளவிற்குக் கூட, கடந்த காலத்தில் தங்களுடன் இணைந்து பயணித்த தமிழ் கட்சிகளுடன் இணக்கத்தை காண்பிக்க விருப்பாமை, ஏனைய கட்சிகளை இரண்டாத்தரமாக நடத்த முற்பட்டமை  மிகவும் எதேச்சாதிகாரமாக நடந்து கொண்டமை - மேற்படி இரண்டு காரணாங்களால்தான், சாத்தியமற்றது என்று எண்ணிய அரசியல் கூட்டணி ஒன்று, சாத்தியமாகியிருக்கின்றது.

## 61 வயதில் 20 ஆண்டுகள் சிறை

### அநுர மறைமுக எச்சரிக்கை

*கொழும்பு, ஜூன் 03*

நமது நாட்டில் ஓர் அரசியல்வாதி 61 வயதில் 20 ஆண்டுகள் சிறைக்குச் செல்ல வேண்டியிருந்தால் செல்வத்தால் என்ன பயன்? என ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க கூறியுள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று நடைபெற்ற விழாவில் உரையாற்றும் போதே ஜனாதிபதி இந்தக் கருத்துகளைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

முதலில் கூறியதை போல நாட்டில், அரசியலில் தற்போது ஒரு கறுப்புப் பொறிமுறை இயங்கி வருகிறது. அதை தடுப்பது அரசாங்கத்தின் பொறுப்பு.

ஒருவர் 61 வயதில் 20 ஆண்டுகள் சிறைக்குச் செல்ல வேண்டியிருந்தால் செல்வத்தால் என்ன பயன்?”

அவர் விடுவிக்கப்படும் போது அவருக்கு 81 வயது இருக்கும். அதன் பயன் என்ன?

நாட்டு மக்களின் வரிப் பணத்தை திருடுவது நியாயமானதா? மிகவும் ஒழுங்கமைக்கப்பட்ட கறுப்புப் பொறிமுறை நம் முன் உள்ளது.

மீண்டும் கூறுகின்றேன். இந்தக் கறுப்புப் பொறிமுறை உடைக்கப்படும் என்று நான் உங்களுக்கு உறுதியளிக்கிறேன் - என்றார். (அ)

## எதிர்க்கட்சிகள் மக்களின் ஆணையை மதிக்கவேண்டும்

*கொழும்பு, ஜூன் 03*

எதிர்க்கட்சிகள் மக்களின் ஆணையை மதிக்க வேண்டுமென சுகாதார மற்றும் தொடர்பாடல் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்கு பெரும்பான்மை பலம் கிடைக்கப் பெற்றுள்ளது என அவர் கூறினார்.

சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்திக்கு எந்தவொரு உள்ளூராட்சி மன்றத்திலும் ஆட்சி அமைக்க மக்கள் ஆணை வழங்கவில்லை என அவர் குறிப்பிட்டார்.

எதிர்க்கட்சி என ஓர் கட்சி கிடையாது எனவும் அவை தனித்தனியாக தங்களது கொள்கைகளை பிரசாரம் செய்து தேர்தலில் போட்டியிட்டவை எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இவ்வாறான ஓர் பின்னணியில் எவ்வாறு எதிர்க்கட்சிகள் கூட்டாக இணைந்து ஆட்சி செய்வது என அவர் கேள்வி எழுப்பினார்.

எனவே கொழும்பு மாநகர சபை உள்ளிட்ட உள்ளூராட்சி மன்றங்களில் தேசிய மக்கள் சக்திக்கு ஆட்சி அமைக்க இடமளிக்க வேண்டும் எனவும் ஆட்சி நடத்துவதற்கு எதிர்க்கட்சிகள் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமெனவும் அவர் கோரினார்.

## காவிந்த எம்.பிக்கு சிக்குன்குனியா!

*கொழும்பு, ஜூன் 03*

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கவிந்த ஜெயவரத்தன சிக்குன்குனியா வைரஸால் பாதிக்கப்பட்ட நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில், அவர் அனைத்து தரப்பினரும் அரசியலை விலக்கி சிக்குன்குனியா மற்றும் டெங்கு பரவலை தடுக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டிய அவசியத்தை வலியுறுத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சிக்குன்குனியா வைரசால் பாதிக்கப்பட்டு தற்போது நான் மருத்துவமனையில் உள்ளேன். உள்ளூராட்சி அமைப்புகளின் நிர்வாகங்களை கட்டுப்படுத்த பல கட்சிகள் களத்தில் இறங்கியிருப்பதை நான் பார்க்கிறேன்.

எனினும், சிக்குன்குனியா மற்றும் டெங்கு பரவலைத் தடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என எண்ணுகிறேன்.

நான் சேர்க்கப்பட்டிருக்கும் கொழும்பு மருத்துவமனையின் அருகே ஒரு நிலப்பரப்பு நீரால் நிறைந்துள்ளது. கொழும்பு மாநகர சபை இதைப் புறக்கணித்து, இப்பகுதிகளை சுத்தம் செய்ய தவறியுள்ளதுபோல் தெரிகிறது.

மொத்தமாக, மக்கள் சுகாதாரம் தொடர்பான இக்கட்டான சூழ்நிலையில், அரசியல் சச்சரவுகளை ஒதுக்கி, நோய் பரவலை தடுக்கும் துரித நடவடிக்கைகள் இப்போது தான் மிகவும் அவசியமாக உள்ளன-என்றார்.

## கொழும்பு கிழக்கு முனைய முன்னேற்றம் குறித்து கண்காணிப்பு விஜயம்


*கொழும்பு, ஜூன் 03*

துறைமுக அபிவிருத்தி அதிகார சபையின் தலைமையில் நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற, கொழும்பு துறைமுக கிழக்கு முனையத்தின் முன்னேற்றம் குறித்து ஆராய்வதற்காக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் பிரதி அமைச்சர் ஜனித ருவன் கொடிதுவக்கு கண்காணிப்பு விஜயம் ஒன்றை மேற்கொண்டார்.


இங்கு விநியோக நடவடிக்கைகளை தானியக்கமாக மேற்கொள்ள எதிர்பார்த்துள்ளதுடன், ஆரம்பத்தில் அரை தானியக்கத்தின் மூலம் விநியோக நடவடிக்கைகளை ஆரம்பிக்க எதிர்பார்த்துள்ளதாகவும் இலங்கை துறைமுக அபிவிருத்தி அதிகார சபை அறிவித்துள்ளது.

அத்துடன், எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய சவால்களை வெற்றிகரமாக எதிர்கொள்ள எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது.

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்** குடும்ப வருமானத்தை உயர்த்த புது முயற்சிகளை மேற்கொள்வீர்கள். நட்பு வட்டம் விரியும். வியாபாரத்தில் புது ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். புது வாய்ப்புகள் தேடி வரும். கனவு நனவாகும் நாள்.

**இடபம்** திட்டமிட்ட காரியங்களை சிறப்பாக முடிப்பீர்கள். வெளிவட்டார தொடர்புகள் அதிகரிக்கும். சக ஊழியர்களால் நிம்மதி கிட்டும். எதிர்பாராத இடத்திலிருந்து உதவிகள் கிடைக்கும். தேவைகள் பூர்த்தியாகும்.

**மிதுனம்** குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளை புரிந்துக் கொண்டு அதற்கேற்ப உங்களை மாற்றிக் கொள்வீர்கள். வியாபாரத்தில் ரெட்டிப்பு லாபம் உண்டு. சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள்.

**கடகம்** குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். பழைய பிரச்னைகளுக்கு மாறுபட்ட அணுகுமுறையால் தீர்வு காண்பீர்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் மதிப்பார்கள். மனசாட்சி படி செயல்படும் நாள்.

**சிம்மம்** ராசிக்குள் சந்திரன் இருப்பதால் மற்றவர்களை நம்பி ஒப்படைக்காமல் நீங்களே செய்து முடிப்பது நல்லது. கலைப் பொருட்கள் வாங்குவீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் குறைக்கூறுவார்கள்.

**கன்னி** கணவன்-மனைவிக்குள் மனஸ்தாபம் வந்து நீங்கும். வியாபாரத்தில் புது முதலீடு செய்யலாம். உத்தியோகத்தில் சக ஊழியர்களுடன் விவாதம் வந்து நீங்கும். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**துலாம்** எதிர்பார்ப்புகள் நிறைவேறும். பிள்ளைகளின் பொறுப்புணர்வை பாராட்டுவீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்கள் ரசனையை புரிந்து கொள்வீர்கள். புது பொறுப்பை ஏற்பீர்கள். மதிப்புக் கூடும்.

**விருச்சிகம்** சொந்த பந்தங்கள் சிலர் கேட்ட உதவியை செய்வார்கள். வியாபாரத்தில் புது சலுகைகளை அறிவிப்பீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் முன் வைத்த கோரிக்கைகள் நிறைவேறும்.

**தனுசு** கணவன்-மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். உறவினர்களால் மதிக்கப்படுவீர்கள். வியாபாரத்தில் சில சூட்சுமங்களைப் புரிந்துக் கொள்வீர்கள். பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

**மகரம்** சந்திராஷ்டமம் இருப்பதால் சிக்கலான சவாலான காரியங்களைகையில் எடுத்துக் கொண்டிருக்காதீர்கள். வியாபாரத்தில் போட்டிகள் இருக்கும். நல்லது. வேலைச்சுமை மிகுந்த நாள்.

**கும்பம்** பிள்ளைகள் உங்கள் பேச்சிற்கு மதிப்பளிப்பார்கள். வியாபாரத்தில் வேலையாட்களின் ஆதரவுக் கிடைக்கும். உத்தியோகத்தில் தைரியமாக முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். நன்மை நடக்கும் நாள்.

**மீனம்** சமயோசிதமாக சாதுரியமாக பேசி காரியம் சாதிப்பீர்கள். அவசர முடிவுகளை தவிர்க்கப் பாருங்கள். அதிகாரப் பதவி பொறுப்பு கிடைக்கும். வியாபாரத்தில் புது யுக்திகளை கையாளுவீர்கள்.

# அனலைதீவு ஐயனார் ஆலய பித்தளை கலசங்கள் மீட்பு!

*யாழ்ப்பாணம், ஜூன் 03*

அனலைதீவு ஐயனார் ஆலயத்தில் திருடப்பட்ட பித்தளை கலசங்கள் ஊர்காவற்துறை பொலிஸாரால் மீட்கப்பட்டன.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் ஊர்காவற்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அனலைதீவு ஐயனார் ஆலயத்தின் 06 பித்தளை கலசங்கள் காணாமல் போயிருந்தன. இது குறித்து ஊர்காவற்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

இந்த நிலையில், ஊர்காவற்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி விதான பத்திரணவின் தலைமையிலான குழுவினர் நேற்று முன்தினம் சந்தேகநபர் ஒருவரை கைது செய்ததுடன்



06 கலசங்களையும் மீட்டனர். விசாரணைகளின் பின்னர் அவரை ஊர்காவற்துறை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(எ-05)

# இளைஞர் சேவைகள் மன்ற அங்குரார்ப்பணம்

*வவுனியா, ஜூன் 03*

வவுனியா மாவட்ட இளைஞர் சேவைகள் மன்றத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

கடந்த இரண்டு வருடங்களாக இளைஞர் கழகங்கள் அமைக்கப்படாத நிலையில் வவுனியா மூன்று முறிப்பு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் வவுனியா மாவட்டத்தில் முதலாவது இளைஞர் கழக அங்குரார்ப்பணம் இளைஞர் விவகார பிரதி அமைச்சர் ஏரங்க குணசேகரவின் பங்குபற்றலுடன் நடைபெற்றது.



இந்த நிகழ்வில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் வடமாகாண பணிப்பாளர் காமினி, உதவிப் பணிப்பாளர் ரவீந்திர ரூபசிங்க, மாவட்ட இளைஞர் சேவைகள் மன்ற அதிகாரி சிவானி மற்றும் இளைஞர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

(எ-10)

# அராலியில் திருவிளையாடல் புராண சொற்பொழிவு

*யாழ்ப்பாணம், ஜூன் 03*

அராலி கிழக்கு மலையாளங்காடு ஐயனார் கோவிலில் சைவ வாழ்வியலில் திருவிளையாடல் புராணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சமய ஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் நடத்தும் வாராந்தத் திருவிளையாடல் புராணச் சிறப்புச் சொற்பொழிவுத் தொடர் -08 எதிர்வரும் 06 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 04. 00 மணிக்கு நடைபெறவுள்ளது. பரஞ்சோதி முனிவர் குருபூஜையை அடுத்து மாணவர்களின் கலை நிகழ்வு நடைபெறவுள்ளது. இதனையடுத்து சைவப்புலவர் செ. த. குமரன் “எழுகடலழைந்த படலம்” என்னும் தலைப்பில் நிகழ்த்தும் சொற்பொழிவும்

சொற்பொழிவிலிருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.

(எ)

# மாணவர்கள் கௌரவிப்பு

*யாழ்ப்பாணம், ஜூன் 03*

க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் மாவட்ட ரீதியாக முதலிடம் பெற்ற மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

வடக்கு மாகாணத்தில் ஐந்து மாவட்டங்களைச் சேர்ந்த, ஆறு துறைகளில் சாதித்த மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர். இந்த கௌரவிப்பு நிகழ்வு தொண்டைமானாறு தேசிய வெளிக்கள நிலையத்தின் ஏற்பாட்டில் நடைபெற்றது.

(எ- 05)






# வவுனியாவில் நுங்கு திருவிழா

*வவுனியா, ஜூன் 03*

வவுனியா மருக்காரம்பளையில் தமிழரின் பாரம்பரிய இசையுடன் நுங்கு திருவிழா நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதன்போது பனை மரத்தின் பயன்கள் தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டதுடன் பனை மரத்தின் உற்பத்திப் பொருட்களும் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

மேலும், கலை நிலா கலையகத்தால் இயற்கை உரத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி நாடக ஆற்றுகையும் இடம்பெற்றது.

இளைஞர்களின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வில் தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் சந்திரகுமார் கண்ணன் மற்றும் கிராம உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

(எ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறைகளை சுட்டிக்காட்டுவதனால் என்னை சிக்கவைக்க அரசு முயற்சி

## தயாசிறி ஜயசேகர குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 03

**என்னைத் திருடன் என்று குறிப்பிட எவருக்கும் முடியாது. அரச அதிகாரிகளுடன் ஒன்றிணைந்து முறையான வழிமுறைகளுக்கு அமைவாகவே செயற்பட்டுள்ளேன். எச்சந்தர்ப்பத்தில் தவறான தீர்மானத்தை எடுக்கவில்லை. என்னை நெருக்கடிக்குள்ளாக்குவதற்கும், சிக்கவைப்பதற்கும் அரசாங்கம் முயற்சிக்கிறது என்பதை நன்கு அறிவேன். அனைத்து சவால்களையும் வெற்றிக் கொள்ள தயாராகவுள்ளேன் என முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சரும், ஐக்கிய மக்கள் சக்தியின் குருநாகல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.**



கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-விளையாட்டுத்துறை அமைச்சர் பிங்கிரிய விளையாட்டு மைதானம் தொடர்பில் தெரிந்தோ அல்லது தெரியாமலோ பல விடயங்களை குறிப்பிட்டுள்ளார். ஒன்று இவருக்கு விடயம் தெரிந்திருக்கவேண்டும் அல்லது பிறிதொருவர் எழுதிக் கொடுத்ததை மனனம் செய்து குறிப்பிட்டிருக்க வேண்டும்.

முன்னாள் விளையாட்டுத் துறை அமைச்சர்கள் பற்றி பல குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளார். போலியான குற்றச்சாட்டுக்களை முன்வைக்க வேண்டாம். நாங்கள் உண்மையாகவும், நேர்மையாகவும் செயற்பட்டுள்ளோம்.பிங்கிரிய விளையாட்டு மைதான நிர்மாணிப்புக்கான பணிகள் 2017 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. 2018 ஏப்ரல் மாதமளவில் விளையாட்டுத்துறை அமைச்சு பதவியில் இருந்து விலகி எதிர்க்கட்சியில் செயற்பட்டேன்.

அதுவரையான காலப்பகுதியில் ஒவ்வொரு ஆண்டும் மாவட்ட மற்றும் மாகாண விளையாட்டு மைதான அபிவிருத்திக்கு விளையாட்டுத் துறை அமைச்சுக்கு 1000 மில்லியன் ரூபாய் வழங்கப்பட்டது. கடந்த அரசாங்கங்கள் மேற்கொண்ட அபிவிருத்தி கருத்திட்டங்களை இடைநிறுத்தவில்லை. முன்கொண்டுச் சென்றோம்.இந்த நிதித் தொகை மாவட்ட மற்றும் மாகாண மட்டத்தில் கருத்திட்ட செயன்முறைக்கு அமைய பகிர்ந்தளிக்கப்பட்டது.

2015 முதல் 2018 வரையான காலப்பகுதியில் மாவட்ட மற்றும் மாகாண மட்டத்தில் 12 மைதானங்களின் நிர்மாண பணிகள் நிறைவு பெறும் நிலையில் காணப்பட்டன.2019 ஆம் ஆண்டுக்கு பின்னர் பிங்கிரிய விளையாட்டு மைதான அபிவிருத்திக்கு ஒரு சதம் கூட நிதி ஒதுக்கப்படவில்லை.என்னுடனான அரசியல் முரண்பாடுகளினால் பிங்கிரிய விளையாட்டு மைதான அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கப்படவில்லை. பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கம் அரசியல் பழிவாங்கல்களுக்காக அபிவிருத்தி கருத்திட்டங்களை இடைநிறுத்தியது.

விளையாட்டுத்துறை அமைச்சர் தெரியாத விடயங்களை ஊடகங்கள் மத்தியில் குறிப்பிடுவதற்கு முன்னர் அரச அதிகாரிகளுடன் கலந்துரையாடவேண்டும். விலைமனுக் கோரல் பத்திரங்களை பரிசீலனை செய்யவேண்டும்.ஆகவே விடயங்களை அறியாமல் போலியான குற்றச்சாட் டுக்களை முன்வைக்க வேண்டாம்.

என்னை திருடன் என்று குறிப்பிட எவருக்கும் முடியாது. அரச அதிகாரிகளுடன் ஒன்றிணைந்து முறையான வழிமுறைகளுக்கு அமைவாகவே செயற்பட்டுள்ளேன். எச்சந்தர்ப்பத்தில் தவறான தீர்மானத்தை எடுக்கவில்லை. என்னை நெருக்கடிக்குள்ளாக்குவதற்கும், சிக்கவைப்பதற்கும் அரசாங்கம் முயற்சிக்கிறது என்பதை நன்கு அறிவேன். அனைத்து சவால்களையும் வெற்றிக் கொள்ள தயாராகவுள்ளேன். ஆளும் தரப்புக்கு நான் தலைவலியாக உள்ளதால் எவ்வழியிலாவது என்னை நெருக்கடிக்குள்ளாக்க அரசாங்கம் முயற்சிக்கிறது-என்றார். (அ)

# ஓய்வு பெறும் நிதி அமைச்சின் செயலாளர் மகிந்த சிறிவர்தன

கொழும்பு, ஜூன் 03

நிதி அமைச்சின் செயலாளர் மகிந்த சிறிவர்தன இந்த மாத இறுதியில் தனது பதவியில் இருந்து ஓய்வு பெறுவார் என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நேற்று திங்கட்கிழமை அறிவித்தார்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற தேசிய வரி வார தொடக்க விழாவில் கலந்துகொண்டு ஜனாதிாதி உரையாற்றுகையிலேயே இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

ஓய்வு பெற்ற பின்னர் சிறிவர்தன ஆசிய அபிவிருத்தி வங்கியின் மாற்று நிர்வாக பணிப்பாளராக தனது கடமைகளை ஏற்றுக்கொள்வார் என்றும் ஜனாதிபதி மேலும் சுட்டிக் காட்டினார். (அ)

# அரசு வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை!

## எல்.எம்.மரிக்கார் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 03



அரசாங்கம் குறுகிய காலப் பகுதியில் மக்கள் நம்பிக்கையை இழந்துள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் எல்.எம்.மரிக்கார் தெரிவித்துள்ளார்.

எதிர்கட்சித்தலைவர் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் அரசாங்கத்தின் வாக்கு வங்கியில் சரிவு ஏற்பட்டுள்ளது. இத்தகைய பின்னணியில் அரசாங்கத்துக்கு 339 உள்ளூராட்சி மன்றங்களில் 161 உள்ளூராட்சி மன்றங்களிலேயே ஆட்சி அமைக்க முடிந்துள்ளது.இதன் ஊடாக அரசாங்கத்துக்கு பெரும்பான்மை இல்லை என்பதே புலனாகின்றது.

7 மாத காலங்களுக்குள் மக்கள் நம்பிக்கையை இந்த அரசாங்கம் இழந்துள்ளது. அத்துடன், உலக சந்தையில் எரிபொருள் விலை குறைவடையும்போது எம்முடைய நாட்டில் அதற்கு இணங்க எரிபொருள் விலையில் மாற்றம் ஏற்படுத்தப்படவேண்டும். ஆனால் இம்முறை இத்தகைய நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. ஏனைய அரசாங்கங்களின் ஆட்சியில் ஊழல் இடம்பெற்றதால் எரிபொருள் விலை குறையவில்லை எனக் கூறினார்கள் தற்போதும் எரிபொருள் விலை குறையவில்லையாயின் இவர்களின் ஆட்சியில் ஊழல் இடம்பெறுகின்றது என்றே எடுத்துக்கொள்ள முடியும். அரசாங்கம் வாக்குறுதியளித்த எந்த விடயத்தையும் மேற்கொள்ளவில்லை. மாறாக மின் கட்டணத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுத்து வருகின்றது-என்றார். (அ)

# லிந்துலை நகர சபையின் முன்னாள் தலைவர் கைது!

கொழும்பு, ஜூன் 03

தலவாக்கலை - லிந்துலை நகர சபையின் முன்னாள் தலைவர் அசோக சேபால கைது செய்யப்பட்டுள்ளார்.

அரசாங்கத்திற்கு 2.38 மில்லியன் ரூபாய் நிதி இழப்பை ஏற்படுத்தியதாகக் கூறப்படும் வழக்கு தொடர்பாக இலஞ்சம் அல்லது ஊழல்குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணையகத்தால் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நகர சபையின் தலைவராக சேபால இருந்த காலத்தில் நடந்த முறைகேடுகள் மற்றும் தவறான நிர்வாகத்தின் காரணமாக இந்த இழப்பு ஏற்பட்டதாக இலஞ்ச ஒழிப்பு ஆணையகம் தெரிவித்துள்ளது. (அ)

# பாணந்துறையில் துப்பாக்கிச் சூட்டு முயற்சி தோல்வி!

கொழும்பு, ஜூன் 03

பாணந்துறை, வாலனை, கெமுனு மாவத்தை பகுதியில் நேற்றுக் காலை 8 மணியளவில் துப்பாக்கிச் சூடு முயற்சி ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்த அடையாளம் தெரியாத இரண்டு நபர்கள் நபர் ஒருவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ள முயன்றுள்ளனர்.

ஆனால் துப்பாக்கி செயலிழந்ததால் அந்த முயற்சி தோல்வியடைந்தது.

இந்த நிலையில் இது தொடர்பான விசாரணைகளை பாணந்துறை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ)

# துறைமுகங்கள்,விமான நிலையங்களில் பி.சி.ஆர். பரிசோதனை முன்னெடுக்குக!

## சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் வலியுறுத்தல்

கொழும்பு, ஜூன் 03

இந்தியா, தாய்லாந்து உள்ளிட்ட நாடுகளில் பரவி வரும் கொரோனா வைரஸ் தொற்றின் பரவலைக் கருத்திற் கொண்டு துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்களில் தொற்றாளர்களை அடையாளம் காணும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவேண்டும் என இலங்கை பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

சிலாபத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய, அந்தச் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன இதனைத் தெரிவித்தார்.

இவ்வாறான இடங்களில் பரிசோதனைகள் முன்னெடுக்கப்படாவிட்டால் இலங்கையில் கொரோனா பரவலின் வேகம் அதிகரிக்கும் அபாயமுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

தற்போது வைத்தியசாலையில் காய்ச்சல் காரணமாக அனுமதிக்கப்படுபவர்களிடமே பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

ஆனால் துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் போன்ற இடங்களில் பி.சி.ஆர் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார். (அ)

# தூங்கிக் கொண்டிருந்த கர்ப்பிணித் தாயின் வயிற்றில் விழுந்த பலாப்பழத்தால் விபரீதம்!

கொழும்பு, ஜூன் 03

தெரணியகல, லிஹினியகல பகுதியில், வீட்டில் தூங்கிக் கொண்டிருந்த கர்ப்பிணிப் பெண்ணின் வயிற்றில் பலாப் பழம் விழுந்ததால் அவரது வயிற்றிலிருந்த குழந்தை உயிரிழந்த துரதிர்ஷ்டவசமான சம்பவம் பதிவாகியுள்ளது.

கடந்த 29 ஆம் திகதி வீட்டில் தூங்கிக் கொண்டிருந்த 33 வயதுடைய ஐந்து மாத கர்ப்பிணிப் பெண் ஒருவர் எதிர்பாராத விதமாக இந்த சம்பவத்தை சந்தித்தார்.

நிலவும் மோசமான வானிலை காரணமாக, வீட்டின் அருகே இருந்த பலா மரம் வீட்டின் கூரையில் விழுந்துள்ளது.

மரத்திலிருந்த பலாப்பழம் ஒன்று கூரையை உடைத்து தூங்கிக் கொண்டிருந்த கர்ப்பிணிப் பெண்ணின் வயிற்றில் விழுந்ததாக தெரிவிக்கப்பட்டது. அவர் உடனடியாக தெரணியகல மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார், இருப்பினும், வயிற் றில் இருந்த குழந்தையின் உயிரைக் காப்பாற்ற முடியவில்லை.

தற்போது அந்தப் பெண் கரவனெல்ல மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (அ)

# பீடி இலைகளுடன் ஒருவர் கைது!

கொழும்பு, ஜூன் 03

நீர்கொழும்பு மாவட்டத்தில் துங்கல்பிட்டிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிட்டிபன பிரதேசத்தில் பீடி இலைகளுடன் சந்தேக நபர் ஒருவர் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் மாலை கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் விசேட அதிரடிப் படையினருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

நீர்கொழும்பு , பிட்டிபன பிரதேசத்தில் வசிக்கும் 31 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். சந்தேக நபரிடமிருந்து 59 கிலோ கிராம் பீடி இலைகள் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதனையடுத்து கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக துங்கல்பிட்டிய பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். மேலும் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை துங்கல்பிட்டிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவின் அதிகாரத்தை குறைக்க இடமளியோம்!

## நீதிமன்றம் செல்கிறது ஐக்கிய மக்கள் சக்தி

கொழும்பு, ஜூன் 03

**பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் அதிகார்தை நிதி அமைச்சின் கீழ் கொண்டுவரும் வகையில் அரசாங்கம் சட்டமூலம் ஒன்றை தயாரித்து வர்த்தமானியில் வெளியிட்டிருக்கிறது. இது மக்கள் ஆணையைக் காட்டிக்கொடுக்கும் செயலாகும். இந்த சட்டமூலத்துக்கு எதிராக நீதிமன்றம் செல்வோம் என ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா தெரிவித்தார்.**

ஐக்கிய மக்கள் சக்தி கட்சி அலுவலகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,மின்சார சபை திருத்தச் சட்டமூலம் வர்த்தமானி படுத்தப்பட்டிருக்கிறது. நாட்டின் பொருளாதார நெருக்கடி நிலையில் மக்கள் அன்றாட வாழ்க்கை நிலையை கொண்டுசெல்ல முடியாமல் இருக்கும் நிலையில் மின்சார கட்டணத்தை 18.3 வீதத்தால் அதிகரிக்கமாறு அரசாங்கம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக ஆராய்ந்து மக்களின் நிலைமை தொடர்பாக கருத்திற்கொண்டு தீர்மானம் எடுப்பதற்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கும் ஆணைக்குழுவே பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவாகும்.

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு இதற்கு முன்னர் பிரஜைகளின் நலன்கருதி நாட்டின் சட்டத்துக்கு அமைய செயற்பட்டிருக்கிறது. ஆனால் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கு இருக்கும் அதிகாரத்தை நிதி அமைச்சருக்கு பய்படுத்த முடியுமானவகையில் மின்சார சபைச் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ள தற்போது சட்டமூலம் தயாரித்திருக்கிறது. இது பிரஜைகளுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் சதித்திட்டம் என்பதுடன் நுகர்வோர் வெற்றி கொண்ட உரிமையை இல்லாமலாக்கச் செய்யும் விடயமாகும்.

இந்த சட்டமூலத்தை அரசாங்கம் சமர்ப்பிக்குமானால் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குவினால் எந்த பயனும் இல்லை. பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு சுயாதீன ஆணைக்குழுவாக செயற்பட்டே மின்சார சபை, மின்சார சபை சமர்ப்பிக்கும் மின்சார கட்டணம் தொடர்பில் ஆராய்ந்தே மின்சார கட்டணத்தை அதிகரிப்பதா குறைப்பதா என அவர்கள் தீர்மானிக்கின்றனர். மின் உற்பத்தி செலவுகளுக்கு அமைய மின் கட்டணம் இதற்கு முன்னர் குறைந்தும் இருக்கிறது அதிகரித்தும் இருக்கிறது.

ஆனால் மக்களின் உரிமைகளை பாதுகாப்பதாக வாக்குதியளித்த அரசாங்கம், தற்போது அதிகாரத்துக்கு வந்து 6 மாதங்களில், பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் அதிகாரத்தை குறைத்து சட்ட மூலம் ஒன்றை தயாரித்து வர்த் தமானியில் வெளியிட்டிருக் கிறது. இது மக்கள் ஆணையை காட்டிக் கொடுக்கும் செயலாகும்.

இந்த சட்டமூலத்துக்கு எதிராக ஐக்கிய மக்கள் உயர் நீதிமன்றத்தில் மனு ஒன்றை தாக்கல் செய்ய இருக்கிறோம். அதேபோன்று இந்த சட்டமூலத்தினால் அரசியல் அமைப்பை மீறும் செயற்பாடுகள் இடம்பெற்றுள்ளதா என தேடிப்பார்க்குமாறு தொழிற்சங்கங்கள் மற்றும் பல சிவில் அமைப்புகள் நீதிமன்றத்தில் முறைப்பாடு செய்திருக்கின்றன. எனவே நுகர்வோரை பாதுகாத்துக் கொள்ள ஐக்கிய மக்கள் சக்தி தொடர்ந்தும் போராடும்-என்றார். (அ)

# போதைப்பொருட்களுடன் மூவர் கைது!

கொழும்பு, ஜூன் 03

ஹல்துமுல்ல, உவதென்ன பகுதியில், சுமார் இரண்டு மில்லியன் ரூபா மதிப்புள்ள சந்தேகத்திற்கிடமான ஐஸ் போதைப் பொருள் தொகையுடன், இளம் தம்பதியினர் ஹல்துமுல்ல பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஹல்துமுல்ல பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில் நடத்தப்பட்ட சோதனையிலேயே குறித்த சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில், 19 வயதுடைய இளைஞர் ஒருவரும் 20 வயதுடைய பெண் ஒருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும் சம்பவம் தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, வெயங்கொடை - புஞ்சி நைவலவத்த பகுதியிலும் ஹெரோயின் போதைப் பொருளுடன் நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட நபரிடமிருந்து 3.655 கிலோகிராம் ஹெரோயின் போதைப்பொருள் பறிமுதல் செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். (அ)

# மதுபோதையில் நபரொருவரை தாக்கிய 6 சிப்பாய்கள் கைது!

கொழும்பு, ஜூன் 03

கொழும்பு, புறக்கோட்டை மிதக்கும் சந்தைப் பகுதிக்கு அருகில் மதுபோதையில் நபரொருவரை தாக்கி காயப்படுத்தியதாக கூறப்படும் ஆறு இராணுவ சிப்பாய்கள் புறக்கோட்டை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மருதானை இராணுவ முகாமில் கடமையாற்றும் 29 முதல் 40 வயதுக்குட்பட்ட ஆறு இராணுவ சிப்பாய்களே கைது செய்யப்பட்டுள்ளனர்.

நீர்கொழும்பு பிரதேசத்தில் வசிக்கும் நபரொருவரே தாக்குதலுக்குள்ளாகி காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.



தாக்குதலில் காயமடைந்தவர் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை புறக்கோட்டை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# சர்வதேச தொழிலாளர் மாநாட்டில் பிரதி அமைச்சர் தலைமையில் குழு

கொழும்பு, ஜூன் 03

சர்வதேச தொழிலாளர் மாநாட்டின் 113 ஆவது அமர்வு நேற்று முதல் எதிர்வரும் 12 ஆம் திகதி வரை ஜெனீவாவில் நடைபெறவுள்ளது.

சர்வதேச தொழிலாளர் அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த மாநாட்டில் பங்கேற்பதற்காகத் தொழில் பிரதி அமைச்சர் மகிந்த ஜயசிங்க உள்ளிட்ட குழுவினர் நேற்று முன் தினம் ஜெனிவாவுக்குப் பயணமாகியதாக அந்த அமைச்சின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டு சர்வதேச தொழிலாளர் மாநாட்டில் தொழிற்துறையிலுள்ள பல்வேறு பிரச்னைகள் குறித்து அவதானம் செலுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

பணியிடத்தில் உயிர் ஆபத்துகளிலிருந்து பாதுகாப்பு, முறைசாரா தன்மையை எதிர்த்துப் போராடுதல் மற்றும் முறையான வேலையை ஊக்குவித்தல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் இந்த ஆண்டு சர்வதேச தொழிலாளர் மாநாட்டில் கலந்துரையாடப் படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# பஸ் - மோட்டார் சைக்கிள் மோதி மனைவி பலி! கணவன் படுகாயம்!!

கொழும்பு, ஜூன் 03

கொழும்பு - காலி பிரதான வீதியில் எலகஹவத்த பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் மனைவி உயிரிழந் துள்ளதுடன் கணவன் படுகாயமடைந்துள்ளதாக பயாகலை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றுள்ளது.

பேருவளையிலிருந்து களுத்துறை நோக்கிப் பயணித்த தனியார் பஸ் ஒன்று மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள் ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தின்போது மோட்டார் சைக்கிளின் பின்புறத்தில் அமர்ந்திருந்த மனைவி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதுடன், மோட்டார் சைக்கிளின் செலுத்துநரான கணவன் படுகாயமடைந்து நாகொடை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் மஹவில, ஹபுருகல பிரதேசத்தைச் சேர்ந்த 58 வயதுடைய பெண் ஆவார்.

இதனையடுத்து பஸ் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பயாகலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# தேசிய பாதுகாப்பு அச்சுறுத்தல் குறித்து பாதுகாப்பு அமைச்சு விசேட அவதானம்

கொழும்பு, ஜூன். 03

சட்ட விரோத இடம்பெயர்வு, எல்லை தாண்டிய மனிதக் கடத்தல், போதைப் பொருள் கடத்தல், தீவிரவாதிகள், பயங்கரவாதிகளின் நடமாட்டம் மற்றும் சர்வதேச எல்லைகள் வழியாகத் தப்பிச் செல்லும் ஒழுங்கமைக்கப் பட்ட குற்றவாளிகளின் சட்ட விரோத நடவடிக்கைகள், போன்ற வளர்ந்து வரும் அச்சுறுத்தல்கள் குறித்து பாதுகாப்பு அமைச்சி னால் விசேட அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

ஆறு வருடங்களின் பின்னர் இலங்கையின் தேசிய எல்லை முகாமைத்துவக் குழு அதன் 9ஆவது அமர்வுக்காக பாதுகாப்பு அமைச்சில் கூடியது. இதன் போதே இவ்விடயங்கள் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

இக்குழுவானது வளர்ந்து வரும் உலகளாவிய மற்றும் பிராந்திய பாதுகாப்பு இயக்கவியலுக்கு மத்தியில் இலங்கையின் எல்லைப் பாதுகாப்புக் கட்டமைப்பை வலுப்படுத்துவதற்கான ஒரு குறிப்பிடத்தக்க படியைக் குறிக்கிறது. இந்தக் கூட்டம் பாதுகாப்புச் செயலாளர் எயார் வைஸ் மார்ஷல் சம்பத் தூயகொந்தாவின் வழிகாட் டுதலின் கீழ் நடைபெற்றது.

முதலில் இலங்கையின் தேசிய எல்லை முகாமைத்துவக் குழு பாதுகாப்புச் செயலாளரின் தலைமையில் ஒருங்கிணைந்த எல்லை முகாமைத்துவ உத்தியின் ஒரு அங்கமாக நிறுவப்பட்டது.

இது பத்து வரு டங்களுக்கு முன்பு சர்வதேச இடம்பெயர்வு அமைப்பு மற்றும் ஆஸ்திரேலியா, கனடா அரசாங்கங்களின் ஆதரவுடன் அறிமுகப்படுத்தப்பட்டதாகும்.

இக்குழுவானது தேசிய எல்லைகள் வழியாக எழும் அச்சுறுத்தல்களை நிவர்த்தி செய்வதை நோக்கமாகக் கொண்டதுடன், குறிப்பாக ஒழுங்கற்ற இடம்பெயர்வு தொடர்பில் அதிக கவனம் செலுத்துகிறது. அதன் ஆரம்பத்திலிருந்து, எட்டு அமர்வுகள் நடத்தப்பட்டு பின்னர் 2021 முதல் ஒரு இடைவெளிக்கு பின் இத்தடவை மீண்டும் நடத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

உலகளவில், குறிப்பாக பிராந்தியத்தில் புவிசார் அரசியல் மற்றும் பாதுகாப்பு நிலவரங்களில் மாற்றம் ஏட்பட்டு வரும் சூழலில், கட்டமைக்கப் பட்ட எல்லை முகாமைத்துவத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து, பாதுகாப்பு அமைச்சு இதனை மீண்டும் செயல்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளது.

வெளியுறவு அமைச்சு, பொதுப் பாதுகாப்பு அமைச்சு, குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம், சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபை, சுங்கத் திணைக்களம், கடற்படை, பொலிஸ் திணைக்களம் மற்றும் கடலோர காவல் படை உள்ளிட்ட முக்கிய நிறுவனங்களின் சிரேஷ்ட பிரதிநிதிகளின் பங்குபற்றலுடன் நடத்தப்பட்ட இந்நிகழ்வில் பல முக்கியமான முடிவுகள் எடுக்கப்பட்டன.

இவ் அமர்வின்போது கருத்து தெரிவித்த பாதுகாப்புச் செயலாளர், நிலையான பொரு ளாதார வளர்ச்சியை அடை வதற்கு, குறிப்பாக சுற்றுலாத் துறையை மேம்படுத்த மற்றும் வெளிநாட்டு முதலீடுகளை ஈர்க்க, உறுதியான தேசிய பாதுகாப்பின் வகிபாகத்தை வலியுறுத்தினார்.

எல்லைப் பாதுகாப்பு என்பது தேசிய பாதுகாப்பின் அடிப்படைத் தூண் என்று தெரிவித்த அவர் இத்துடன் தொடர்புடைய அனைத்து நிறுவனங்களின் பொறுப்புக்கூறலுடன் கூடிய தீவிர ஈடுபாட்டையும் அவர் வலியுறுத்தினார்.

இந்த அச்சுறுத்தல்களுக்கு விரைவான மற்றும் ஒருங்கிணைந்த தீர்வுகளுக்கான அவசரத் தேவையை பாதுகாப்புச் செயலாளர் எடுத்துரைத்ததுடன் எல்லைப் பாதுகாப்பு தொடர்பான பிராந்திய மற்றும் சர்வதேச கட்டமைப்புகளுக்கான இலங்கையின் உறுதிப்பாட்டை வலியுறுத்தினார். (அ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வரவு-செலவுத் திட்டத்தில் சாத்தியமான சகல தொகைகளையும் குறைத்துள்ளேன்

## ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க



கொழும்பு, ஜூன் 03

**ஜனாதிபதியின் வரவு-செலவுத் திட்டத்தில் சாத்தியமான அனைத்துத் தொகைகளையும் குறைத்துள்ளதாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.**

பொதுமக்களின் வரிகளில் இருந்து ஒவ்வொரு ரூபாயையும் பாதுகாக்க இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி மேலும் கூறினார்.

மேலும், அமைச்சரவை மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் அத்தகைய நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக ஜனாதிபதி கூறினார்.

கொழும்பில் உள்ள ஜனாதிபதி செயலகத்தில் தேசிய வரி வாரத்தின் தொடக்க விழாவில் பங்கேற்றபோது ஜனாதிபதி இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-நாட்டில் வரி செலுத்துவதில் தயக்கம் இருப்பதை பல வேறு புள்ளிவிவரங்கள் நிரூபிக்கின்றன. இதற்குக் காரணம் என்ன? ஒன்று நமது அரசியல் அதிகாரம்.

நமது நாட்டில் வரிப் பணத்தை அரசியல் அதிகாரம் எவ்வாறு பயன்படுத்தியுள்ளது என்பது குறித்து வரி செலுத்துவோர் மற்றும் பொதுமக்களிடமிருந்து நிறைய விமர்சனங்கள் உள்ளன.

இந்த நாட்டின் வரி செலுத்துவோரிடமிருந்து வசூலிக்கப்படும் பணம் அரசியல் அதிகாரத்தால் அத்தியாவசிய நோக்கங்களுக்காக முறையாகப் பயன்படுத்தப்படுகிறது என்ற செய்தியை முதலில் வரி செலுத்துவோருக்கு வழங்கவேண்டும்.

அந்தப் பொறுப்பு எனக்கும், அமைச்சுகளுக்கும், அரசியல் அதிகாரத்துக்கும் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

நீங்கள் செலுத்தும் எந்தவொரு வரிப் பணத்திலும் ஒரு ரூபாயைக் கூட அரசியல் அதிகாரிகள் மோசடி செய்யமாட்டார்கள் என்பதை நான் உங்களுக்கு உறுதியளிக்கிறேன்.

ஜனாதிபதியாக, மக்களின் வரிப் பணத்திலிருந்து எனக்கு சில சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன.

அமைச்சரவை முடிவுகளால் சில சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன. தற்போது, அந்த சலுகைகளில் பெரும் எண்ணிக்கையை நாங்கள் விட்டுக்கொடுத்துள்ளோம்-என்றார். (அ)

# வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளான பஸ்!



கொழும்பு, ஜூன் 03

கொழும்பிலிருந்து மஸ்கெலியா நோக்கி பயணித்த இலங்கை போக்குவரத்துச் சபை அவிசாவளை டிப்போவுக்குச் சொந்தமான பஸ்ஸென்று வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானது.

நோட்டன் பிரிட்ஜ் தியகல வீதியில் நேற்றுக் காலை இவ் விபத்து இடம்பெற்றுள்ளது.

திடீரென ஏற்பட்ட இயந்திர கோளாறே விபத்துக்கான காரணம் என நோட்டன் பிரிட்ஜ் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ)

# சட்டவிரோதமாக அகழ்வில் ஈடுபட்ட மூன்று பேர் கைது!

கொழும்பு, ஜூன் 03

பழங்காலப் பொருட்களை பெறும் நோக்கில் சட்டவிரோதமாக அகழ்வு நடவடிக்கைகளில் ஈடுபட்ட சந்தேகநபர்கள் மூவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பொத்துவில் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட லாஹுகல, கொடவெஹெர வனப் பகுதியில் பொத்துவில் பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் நேற்று முன் தினம் மேற்கொண்ட சுற்றிவளைப் பின்போதே குறித்த சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் 40 மற்றும் 41 வயதுடைய பொத்துவில், அட்டாளைச்சேனை மற்றும் இரத்மலானை பகுதிகளைச் சேர்ந்தவர்களென தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களிடம் இருந்து அகழ்வு நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்ட உபகரணங்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொத்துவில் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (அ)

# கூரிய ஆயுதத்தால் தாக்கி பெண்ணொருவர் கொலை!

கொழும்பு, ஜூன் 03

ரம்புக்கனை - கப்பல பிரதேசத்தில் உள்ள காணியொன்றில் வைத்துக் கூரிய ஆயுதத்தால் தாக்கி பெண்ணொருவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

சம்பவத்தில் உயிரிழந்த பெண் 46 வயதுடைய கொஸ்கஹகும்புர பிரதேசத்தைச் சேர்ந்தவராவார்.

உயிரிழந்த பெண்ணுக்கு திருமணத்துக்கு புறம்பான உறவு இருந்தாகவும், இதனால் அவரது கணவன் இவ்வாறு கூரிய ஆயுதத்தால் தாக்கிக் கொலை செய்துள்ளதாக பொலிஸாரின் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

தாக்குதலை மேற்கொண்ட நபர் அப்பிரதேசத்தை விட்டு தப்பிச் சென்றுள் நிலையில், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ரம்புக்கனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# முப்படைகளில் இருந்து தப்பிய 2,983 பேர் கைது!

கொழும்பு, ஜூன் 03

முப்படைகளில் இருந்து தப்பியோடிய அதிகாரிகள் உட்பட 2,983 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பெப்ரவரி 22 முதல் மே 30 வரை நடத்தப்பட்ட நடவடிக்கைகளில் அவர்கள் கைது செய்யப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்டவர்களில் 2,261 பேர் இராணுவத்தினரும், 194 பேர் கடற்படையினரும், 198 பேர் விமானப்படையினரும் அடங்குவர்.

மேலும், தப்பியோடிய 330 பேர் மற்றும் அதிகாரிகளையும் இலங்கை பொலிஸார் கைது செய்துள்ளதாகவும் பாதுகாப்பு அமைச்சு மேலும் குறிப்பிட்டுள்ளது. (அ)

# மின்சாரம் தாக்கி சிறுவன் மரணம்!

கொழும்பு, ஜூன் 03

மதுரங்குளிய - சீமரகம பிரதேசத்தில் மின்சாரம் தாக்கி காயமடைந்த சிறுவன் புத்தளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன் தினம் பிற்பகல் இந்த விபத்து நடந்ததாக மதுரங்குளிய பொலிஸ் நிலையத்திற்கு கிடைத்த முறைப்பாட்டுக்கு அமைய விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சம்பவத்தில் உயிரிழந்தவர் சீமரகம பகுதியைச் சேர்ந்த 16 வயதுடையவராவார்.

வீட்டில் மின் சாதனத்தை நிறுவ முயன்றபோது, சிறுவன் மின்சாரம் தாக்கி உயிரிழந்தாக பொலிஸாரின் விசாரணைகளில் இருந்து தெரியவந்தது.

சடலம் புத்தளம் வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன், மதுரங்குளி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# கட்சி முடிவை மீறினால் உறுப்பினர் பதவி பறிப்பு

## ஐக்கிய மக்கள் சக்தி எச்சரிக்கை



கொழும்பு, ஜூன் 03

உள்ளூராட்சிச் சபைகளில் ஆட்சியமைப்பதற்குரிய முயற்சியின்போது கட்சியின் முடிவுக்கு எதிராக செயற்படும் உறுப்பினர்களின் பதவி பறிக்கப்படும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதம நிறைவேற்று அதிகாரி அஜித் பி பெரேரா எம்.பி. தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

"கொழும்பு மாநகரசபை உட்பட எதிரணிகள் ஆட்சியமைப்பதற்குரிய பெரும்பான்மை உள்ள இடங்களில் ஆட்சியமைப்பதற்குரிய இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது. உள்ளூராட்சி ஆணையாளரால் வழங்கப்படும் தினமொன்றில் அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

கொழும்பு மாநகரசபையில் ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர் ஒருவர் மேயராக தெரிவாகக்கூடிய சாத்தியம் உள்ளது.

அதேபோல கொழும்பு மாநகரசபை உட்பட ஏனைய உள்ளூராட்சிசபைகளில் கட்சியின் முடிவுக்கு எதிராக செயற்படும் உறுப்பினர்களின், பதவி பறிக்கப்படும். நாடாளுமன்ற உறுப்பினர் பதவி போல் அல்ல, உள்ளூராட்சி சபை உறுப்பினருக்கு எதிராக இலகுவில் நடவடிக்கை எடுத்து, பதவியை செயலாளரால் பறிக்க முடியும்."- எனவும் அஜித் பி பெரேரா குறிப்பிட்டார். (அ)

# ஹக் செய்யப்பட்டது நீர் வழங்கல் சபையின் குறுஞ்செய்தி கட்டமைப்பு

## வாடிக்கையாளர்களுக்கு அச்சுறுத்தல் செய்திகள்

கொழும்பு, ஜூன் 03

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் குறுஞ்செய்தி கட்டமைப்பு ஹக் செய்யப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

ஹேக் செய்த பிட்கொய்ன் ரன்சம் வைரஸ் வாடிக்கையாளர்களுக்கு பணம் கேட்டு குறுஞ்செய்தி அனுப்பியுள்ளதாக முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

சமூக ஊடகங்களில் பலர் தங்களுக்கு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் உத்தியோகபூர்வ குறுஞ்செய்தி இலக்கத்திலிருந்து குறுஞ்செய்தி வந்துள்ளதாக தெரிவித்துள்ளனர்.

அதில், "உங்கள் நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் கணக்கு ஆல்பா குழுவால் ஹேக் செய்யப்பட்டுள்ளது. 1.5 பி.ரி.சி. கிடைத்தால் உங்கள் தரவை மீட்டெடுக்க முடியும்" என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த பிட்கொய்ன் வாலட் முகவரி அடங்கிய குறுஞ்செய்திகள், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் நீர் கட்டணம் மற்றும் முறைப்பாடுகள் புதுப்பிப்புகளுக்குப் பயன்படுத்தப்படும் அதே இலக்கத்திலிருந்து அனுப்பப்பட்டுள்ளன.

எந்த தரவு திருடப்பட்டது அல்லது கசிந்தது என்பது தெளிவாகத் தெரியவில்லை. அதிகாரிகள் இது தொடர்பில் இன்னும் உத்தியோகபூர்வ அறிவிப்பை வெளியிடவில்லை.

எனவே, பயனர்கள் குறுஞ்செய்தி களுக்கு பதிலளிக்க வேண்டாம் எனவும், சந்தேகத்திற்கிடமான எந்தவொரு செயல்பாட்டையும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் தெரிவிக்கவேண்டும் எனவும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பௌத்த மயமாக்கலை கண்டித்து கிழக்கு மாகாணத்தில் போராட்டம்

திருகோணமலை, ஜூன் 03

**கிழக்கு மாகாணத்தில் தொடரும் நில அபகரிப்பு மற்றும் பௌத்த மயமாக்கலுக்கு எதிராக கடும் கண்டனத்தை வெளியிடுவதுடன் அவற்றுக்கு எதிராக தொடர் போராட்டங்களில் ஈடுபடவுள்ளதாக கிழக்கு மாகாண திட்ட வரைபு ஒன்றியம் அறிவித்துள்ளது.**

திருகோணமலை சர்வோதயத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின்போது அந்த அமைப்பின் மாகாண பொருளாளர் த. நவஜோதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில், யுத்தம் நிறைவுற்ற பின்னர் பல ஆட்சியாளர்கள் மாறினாலும் அன்றிலிருந்து இன்று வரை பல இந்து ஆலயங்கள் பௌத்த மயமாக்கப்பட்டு வருகின்றன.

திருகோணமலையை பொறுத்தவரையில் வெருகல்- கல்லடி பகுதியில் உள்ள சைவ ஆலயமான மலை நீலி அம்மன் ஆலயத்தினுள் பௌத்த மதத்தை நிறுவும் முகமாக புத்தர் சிலை ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று மூதூர் 64ஆம் கட்டை மலையில் பௌத்த விகாரை ஒன்று நிறுவப்பட்டு வருகின்றது. சைவ ஆலயங்கள் என்பது வாழ்வியலும் நம்பிக்கையுமாகும்.


தற்போது ஆட்சிக்கு வந்திருக்கின்ற அநுர அரசாங்கத்தின் ஆட்சியில் இவ்வாறான விடயங்கள் இடம்பெறாது என ஜனாதிபதி வாக்குறுதி வழங்கியிருந்தார்.

எனினும் அநுர ஆட்சியிலும் இது தொடர்ந்து வருகின்றது. அண்மையில் அம்பாறை மாவட்டத்தில் உகந்தை மலையில் புத்தர் சிலை வைக்கப்பட்டுள்ளது.

எனினும் ஆலய நிர்வாகத்தினர் ஏற்கனவே அப்பகுதியில் 125 அடி உயரமான முருகன் சிலையை நிறுவுவதற்கு அனுமதி கோரியபோது அங்கிருந்த கடற்படையும், வனவள பாதுகாப்பு திணைக்களமும் அதனை தடுத்திருந்தனர்.

இந்த நிலையில் திடீரென அவர்களின் முன்னிலையிலேயே அப்பகுதியில் தற்போது புத்தர் சிலை வைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான விடயங்கள் தொடர்பில் கிழக்கு மாகாண திட்ட வரைபு ஒன்றியத்தின் சார்பில் ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்றை வழங்குவதற்கும் இதே போன்று எதிர்வரும் நாட்களில் கிழக்கு மாகாணத்தில் தொடரும் நில அபகரிப்பு மற்றும் பௌத்த மயமாக்கலுக்கு எதிர்ப்பு தெரிவித்து கண்டன ஆர்ப்பாட்டங்களையும் நடத்துவதற்கு தயாராகி வருகின்றோம். - என்றார்.



# ஆளும் கட்சி எம்.பிக்களுடன் உயர் அதிகாரிகள் சந்திப்பு

கல்முனை, ஜூன் 03

கிழக்கு மாகாண சபையின் இவ்வாண்டுக்கான பி.எஸ்.ஜி.எஸ். நிதி ஒதுக்கீட்டினை எவ்வாறு பயன்படுத்துவது என்பது தொடர்பான உயர்மட்ட கலந்துரையாடல் அம்பாறையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் அம்பாறை மாவட்ட ஆளும்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இடையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாட்லில் கிழக்கு மாகாண திட்டமிடல் பணிப்பாளர், கிழக்கு மாகாண கல்வி, சுகாதார, இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர், கிழக்கு மாகாண பிரதம செயலாளர், கிழக்கு மாகாண சபையின் செயலாளர்கள் மற்றும் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ)

# அம்மன் ஆலயத்தின் மகா கும்பாபிஷேகம்


புன்னைச்சோலை, ஜூன் 03

வரலாற்று பிரசித்தி பெற்ற மட்டக்களப்பு - புன்னைச்சோலை அருள்மிகு சிறீ பத்திரகாளி அம்பாள் ஆலய புனராவர்த்தன அஷ்டபந்தன நவகுண்ட பக்ஷ மகா கும்பாபிஷேக குடமுழுக்கு பெரும் சாந்தி விழா எதிர்வரும் 08 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

இங்கு நவதள இராஜகோபுரம் மிகவும் அழகாக அமைக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் இங்குதான் நவதள இராஜகோபுரம் முதல் தடவையாக அமைக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் அம்மன் ஆலய மகா கும்பாபிஷேகத்துக்கான கர்மாரம்பம் நாளை 04 ஆம் திகதி புதன்கிழமை ஆரம்பமாகவுள்ளது.



பக்தர்கள் எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு- 06 ஆம் 07ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.


மகா கும்பாபிஷேகம் 08 ஆம் திகதி நடைபெறவுள்ளது. (எ-08)

# சுற்றாடல் தினத்தை முன்னிட்டு நிலாவெளியில் சிரமதானம்

திருகோணமலை, ஜூன் 03

சுற்றாடல் தினத்தை முன்னிட்டு கிளீன் சிறீலங்கா வேலைத் திட்டத்தின் கீழ் திருகோணமலை நிலாவெளி புறாத் தீவு சுற்றுலா கடற்கரை பிரதேசம் நேற்றுக்காலை சிரமதானம் செய்யப்பட்டது.

கிழக்கு மாகாண ஆளுநர் ஜயந்தலால் ரத்னசேகர தலைமையில் நடைபெற்ற இந்த சிரமதான நிகழ்வில் தேசிய மக்கள் சக்தியின் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரொஷான் அக்மீமன, மாவட்ட அரசாங்க அதிபர் ஜீ. எம்.ஹேமந்த குமார, குச்சவெளி பிரதேச செயலாளர் உட்பட சுற்றுலாத் துறை பணியக தலைவர், முப்படை அதிகாரிகள், சுற்றுலாத் துறை சங்கங்கள், உள்நாட்டு - வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.




இதில் அதிகளவான சுற்றுலாத் துறை பயணிகளை கவரும் புறாத் தீவு மற்றும் அதனை அண்டிய கரையோர பகுதிகள் சுத்தம் செய்யப்பட்டன. இதன்போது பொலித்தீன், பிளாஸ்ரிக் கழிவுகள் பெருமளவில் அகற்றப்பட்டன.

இதன் மூலம் சிறந்ததொரு சுற்றுச் சூழலை உருவாக்கவும் அழகான சுற்றுலாத் தளமாக குறித்த பகுதிகளை மேம்படுத்த முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது என ஆளுநர் கூறினார். (எ)

# குற்றவாளிகள் நிச்சயம் தண்டிக்கப்பட வேண்டும்

## சிறிநேசன் எம். பி. தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஜூன் 03

ஊடகவியலாளர்களின் படுகொலைகளுடன் தொடர்புபட்டவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படும் நிலையில் இந்தப் படுகொலைகளுடன் தொடர்புபட்டவர்களுக்கு தண்டனைகள் பெற்றுக் கொடுக்கப்படும் என தாங்கள் நம்புவதாக இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஞா. சிறிநேசன் தெரிவித்தார்.



படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் ஐயாத்துரை நடேசனின் 21ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு கடந்த சனிக்கிழமை மட்டக்களப்பு காந்திபூங்காவில் உள்ள படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்கள் நினைவுத்தூபியில் நடைபெற்றது. இதேவேளை நீதிகோரி போராட்டமும் நடைபெற்றது. இதன்போது சிறிநேசன் எம். [illegible] டார். (எ)

# தமிழ் அரசுடன் சுயேச்சைக் குழு இணைந்து ஆட்சியமைக்க முடிவு

நாவிதன்வெளி, ஜூன் 03

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சித் தேர்தலில் அம்பாறை மாவட்டம் நாவிதன்வெளி பிரதேச சபையில் இலங்கை தமிழ் அரசுக் கட்சியுடன் இணைந்து ஆட்சி அமைக்க, அங்கு போட்டியிட்ட சுயேச்சைக்குழு இணக்கம் தெரிவித்துள்ளது.

தமிழ் அரசுக் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் எம். ஏ. சுமந்திரன், பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் உள்ளிட்ட குழுவினருடன் சுயேச்சை குழு தலைவர் கு. புவனரூபன் தலைமையிலான குழுவினர் சந்தித்து பேச்சுக்கள் நடத்தினர்.

குறித்த பேச்சுவார்த்தை நேற்று முன்தினம் களுவாஞ்சிக்குடியில் நடைபெற்றது.

ஆட்சியமைக்க தாங்கள் பூரண ஒத்துழைப்பு வழங்குவதாக ரூபன் இணக்கம் தெரிவித்தார் .

இதன்படி நாவிதன்வெளி பிரதேச சபையின் தவிசாளராக தமிழ் அரசுக்கட்சியின் உறுப்பினர் இ. ரூபசாந்தன் மற்றும் உபதவிசாளராக சுயேச்சை குழுவின் தலைவர் கு. புவனரூபன் தெரிவாகலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (எ-08)

# மூதூரில் கடைகளை உடைத்து திருட்டு

மூதூர், ஜூன் 03

திருகோணமலை, மூதூரில் சில கடைகளை உடைத்து பொருட்களை திருடி சென்றிருப்பதாக கடை உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றது. இது தொடர்பான மேலதிக விசாரணையை மூதூர் பொலிஸார் மேற்கொண்டு-வருகின்றனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரஷ்யாவின் 40 விமானங்களை தாக்கி அழித்தது உக்ரைன்!



மொஸ்கோ, ஜூன் 03

**ரஷ்யாவின் 4 விமானப்படை தளங்கள்மீது உக்ரைன் நூற்றுக்கணக்கான ட்ரோன்கள் மூலம் நேற்று முன்தினம் தாக்குதல் நடத்தியது. இதில் 40இற்கும் மேற்பட்ட ரஷ்ய போர் விமானங்கள் அழிக்கப்பட்டன. இதன் மூலம் ரஷ்யாவுக்கு 700 கோடி டொலர்கள் (சுமார் 2 இலட்சத்து 500 கோடி இலங்கை ரூபாய்) இழப்பு ஏற்பட்டுள்ளதாக உக்ரைன் தெரிவித்துள்ளது.**


ரஷ்யாவின் பெலயா, ஒலன்யா, டியாகிலெவா, இவாநோயா ஆகிய நான்கு விமானப்படை தளங்கள் மீதே இந்தத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

லொறிகளில் ட்ரோன்கள் கொண்டு செல்லப்பட்டே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது. லொறியின் கதவுகள், ட்ரோன்கள், தானியங்கி முறையில் இயக்கப்பட்டன.

உக்ரைனின் இந்தத் தாக்குதலில் அணுகுண்டுகளை வீசவல்ல ருபோலேவ் ரி. யூ-95, ரி. யூ-22, ரி. யூ. -160 ஆகிய விமானங்களும் அடங்கும் என்று கூறப்படுகின்றது. அத்துடன், வெடிகுண்டு தாக்குதல் நடத்தும் விமானங்களும் ஏ-50 விமானம் ஒன்றும் அடங்கும். இது போரில் முதன்முறையாக ரஷ்யாவுக்கு எதிராக நடத்தப்பட்ட தீவிரத் தாக்குதலாகும். இது ரஷ்யாவுக்கு பெரும் பின்னடைவாக பார்க்கப்படுகிறது.

ரஷ்யா - உக்ரைன் இடையே 2022ஆம் ஆண்டு மூண்ட போரானது 3 ஆண்டுகளை கடந்தும் நீடிக்கிறது. உக்ரைனுக்கு அமெரிக்கா, ஜேர்மனி உள்ளிட்ட நாடுகள் ஆயுத மற்றும் நிதி உதவியை வழங்கி வருகின்றன. ரஷ்யாவுக்கு, வடகொரியா உதவி வருகிறது.

போரால் பெண்கள், குழந்தைகள் மற்றும் படையினர் என இரு தரப்பிலும் பல்லாயிரக்கணக்கானோர் பலியாகினர். இலட்சக்கணக்கானோர் பாதிக்கப்பட்டுள்ளனர். போரை முடிவுக்கு கொண்டுவர சமரச பேச்சுகளில் அமெரிக்கா ஈடுபட்டுள்ளது. இந்த நிலையிலேயே ரஷ்யா மீது உக்ரைன் இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளது. (எ)




# நைஜீரியாவில் வீதி விபத்தில் 22 விளையாட்டு வீரர்கள் பலி

அபுஜா, ஜூன் 03

நைஜீரியாவில் இடம்பெற்ற வீதி விபத்தில் 22 விளையாட்டு வீரர்கள் உயிரிழந்தனர்.

நைஜீரிய நாட்டின் தென் மேற்கு பகுதியில் அமைந்துள்ள ஒகுன் மாகாணத்தில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்று விட்டு 35 விளையாட்டு வீரர்கள், பயிற்சியாளர்கள் நேற்று முன்தினம் இரவு பேருந்தில் வீடு திரும்பிக் கொண்டிருந்தனர். இந்த பேருந்து சிரோமாவா என்ற இடத்தில் உள்ள மேம்பாலத்தில் சென்ற போது கட்டுப்பாட்டையிழந்து, மேம்பாலத்தின் தடுப்புச்சுவரை இடித்துக் கொண்டு தரையில் விழுந்தது. இதில் 22 பேர் உயிரிழந்தனர்.

காயமடைந்தவர்கள் அருகிலுள்ள மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அதிக நேரம் வாகனத்தை செலுத்தியதால் சாரதி சோர்வுடன் இருந்தமை, மோசமான வீதி, அதிக வேகம் ஆகியவற்றின் காரணமாக இந்த விபத்து இடம்பெற்றதாக முதல் கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. (எ)

# அமைதிப் பேரணியில் பெற்றோல் குண்டு வீச்சு

## அமெரிக்காவில் பயங்கரவாத தாக்குதல்

வாஷிங்டன், ஜூன் 03

அமெரிக்காவில் இடம்பெற்ற பெற்றோல் குண்டு வீச்சு தாக்குதலில் 6 பேர் படுகாயமடைந்தனர். இது பயங்கரவாதத் தாக்குதல் என்று பொலிஸார் அறிவித்துள்ளனர்.

அமெரிக்காவின் பொல்டர் நகரில் பெர்ல் வீதியில் நேற்று முன்தினம் அமைதிப் பேரணி நடைபெற்றது. காஸாவில் ஹமாஸ் அமைப்பினர் பிடியில் உள்ள பணயக் கைதிகளை விடுதலை செய்ய வலியுறுத்தி இந்த அமைதிப் பேரணி நடைபெற்றது. இந்தப் பேரணியில் அமெரிக்க வாழ் இஸ்ரேலியர்கள், யூதர்கள், இஸ்ரேல் ஆதரவாளர்கள் எனப் பலர் பங்கேற்றனர்.

இந்த நிலையில், பேரணியின் போது திடீரென பெற்றோல் குண்டுகளுடன் நுழைந்த நபர் அங்கிருந்தவர்கள் மீது குண்டுகளை வீசினார். அந்த பெற்றோல் குண்டுகள் வெடித்து தீப்பற்றி எரிந்தன. இதில் பேரணியில் பங்கேற்ற 6 பேர் படுகாயமடைந்தனர். “பலஸ்தீனம் விடுதலை” என்ற கோஷம் எழுப்பிய நபர் இந்தத் தாக்குதலை நடத்தினார். தகவலறிந்து விரைந்து வந்த பொலிஸார் காயமடைந்தவர்களை மீட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதித்தனர்.

பெற்றோல் குண்டு வீச்சு தாக்குதல் நடத்திய முகமது சுலைமான் என்ற நபரை கைது செய்தனர். இது பயங்கரவாதத் தாக்குதல் என்று பொலிஸார் அறிவித்துள்ளனர். கைது செய்யப்பட்ட நபரிடம் தொடர்ந்து விசாரணை நடைபெற்று வருகிறது. (எ)

# வெற்றிக் கொண்டாட்டத்தில் திடீரென வெடித்த வன்முறை

## பிரான்ஸில் 560 பேர் கைது

பாரிஸ், ஜூன் 03

பிரான்ஸில் வெற்றிக் கொண்டாட்டத்தில் வன்முறை பரவியதில் இருவர் பலியாகினர். 192 பேர் காயமடைந்தனர். 560 பேர் கைது செய்யப்பட்டனர்.

வன்முறையை கட்டுப்படுத்த பாரிஸ் நகர் முழுவதும் 5400 பொலிஸார் குவிக்கப்பட்டனர்.

ஜேர்மனியின் முனிச் நகரில் பாரிஸ் செயின்ட்- ஜேர்மைன் (பி. எஸ். ஜி.) மற்றும் இன்ரர் மிலன் அணிகளுக்கு இடையே சம்பியன்ஸ் லீக் உதைபந்தாட்ட இறுதிப் போட்டி நடைபெற்றது. இந்தப் போட்டியில், பி. எஸ். ஜி. அணி 5-0 என்ற புள்ளிக் கணக்கில் வெற்றி பெற்றது. இதுவரை இல்லாத வகையில் இது மிகப் பெரிய வெற்றியாகும்.

இதனைத் தொடர்ந்து, பிரான்ஸின் பாரிஸ் நகரின் வீதிகளில் மக்கள் கொண்டாட்டங்களில் ஈடுபட்டனர். அப்போது, திடீரென வன்முறை பரவியது. டாக்ஸ் நகரில் 17 வயது சிறுவன் கத்தியால் குத்திக் கொல்லப்பட்டான் என தேசிய பொலிஸ் படை தெரிவித்தது. இதே போன்று பாரிஸ் நகரில் நடைபெற்ற கொண்டாட்டத்தின் போது, கார் ஒன்று மோட்டார் சைக்கிள் மீது மோதியது.

இதில், மோட்டார் சைக்கிளில் வந்த நபர் பலியானார். 20 வயதுடைய அந்த நபர், வன்முறையால் பலியானாரா? என்பது உறுதி செய்யப்படவில்லை என பொலிஸார் தெரிவித்தனர். வன்முறையை கட்டுப்படுத்த, பாரிஸ் நகர் முழுவதும் 5,400 பொலிஸார் குவிக்கப்பட்டனர். அத்தோடு, பொலிஸார் கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசினர்.

இதனால் ஏற்பட்ட வன்முறையில் 192 பேர் காயமடைந்தனர். 264 வாகனங்கள் தீ வைத்து எரிக்கப்பட்டன. 692 தீ வைப்பு சம்பவங்கள் பதிவாகியுள்ளன. 560 பேர் கைது செய்யப்பட்டனர். இந்த மோதலில் சிக்கிய பொலிஸ் அதிகாரி ஒருவர் சுயநினைவற்ற நிலைக்கு சென்றுவிட்டார் என்று அதிகாரிகள் தெரிவித்தனர். (எ)

# பங்களாதேஷ் நாணயத்தாளில் முஜிபுர் ரகுமான் படம் நீக்கம்

டாக்கா, ஜூன் 03

பங்களாதேஷ் வெளியிட்டுள்ள புதிய நாணயத்தாளில் அந்த நாட்டின் தேசத்தந்தை முஜிபுர் ரகுமான் படம் நீக்கப்பட்டுள்ளது.

பங்களாதேஷில் வெளியிடப்படும் நாணயத்தாளில் வழக்கமாக அந்த நாட்டுக்கு சுதந்திரம் பெற்றுத் தந்த தேசத் தந்தை ஷேக் முஜிபுர் ரகுமான் படம் இடம்பெற்றிருக்கும். இவரது மகள் ஷேக் ஹசீனாவின் ஆட்சிக்கு எதிராக கடந்தாண்டு மாணவர்கள் போராட்டம் நடத்தினர். பங்களாதேஷ் சுதந்திரத்தின் போது உயிரிழந்த இராணுவத்தினரின் வாரிசுகளுக்கு மீண்டும் இடஒதுக்கீடு வழங்க முடிவு செய்யப்பட்டதை எதிர்த்து இந்தப் போராட்டம் நடைபெற்றது. இந்தப் போராட்டம் தீவிரம் அடைந்ததால், ஷேக் ஹசீனா பிரதமர் பதவியை இராஜினாமா செய்து விட்டு இந்தியாவில் தஞ்சம் அடைந்தார். தற்போது பங்களாதேஷில் முகமது யூனுஸ் தலைமையிலான இடைக்கால [illegible] அரசின் ஆட்சி நடைபெறுகிறது.

இந்த நிலையில் பங்களாதேஷ் 3 புதிய நாணயத்தாள்களை நேற்று முன்தினம் வெளியிட்டது. அதில் முஜிபுர் ரகுமான் படம் இடம்பெறவில்லை. அத்தோடு, எந்த மனித உருவத்தின் படமும் இடம்பெறவில்லை. அவற்றுக்கு பதில் இயற்கை காட்சிகள், பங்களாதேஷின் பாரம்பரிய அடையாளங்கள் இடம்பெற்றுள்ளன. (எ)

# போர் விமானங்களை தயாரிக்கிறது இந்தியா

புதுடில்லி, ஜூன் 03

ஐந்தாம் தலைமுறை ஸ்டெல்த் போர் விமானங்களின் உள்நாட்டுத் தயாரிப்புக்கு இந்திய பாதுகாப்பு அமைச்சு ஒப்புதல் வழங்கியுள்ளது. ஸ்டெல்த் என்ற ஆங்கிலச் சொல்லுக்கு இரகசியம் என்று பொருள். இந்த வகை விமானங்கள் எதிரிகள் அறியாத வகையில் அவர்களின் ரேடார்களுக்குள் சிக்காமல் எதிரி நாட்டுக்குள் ஊடுருவக் கூடியவை.

இதுவரை அமெரிக்கா, ரஷ்யா மற்றும் சீனா ஆகிய நாடுகள் மட்டுமே ஐந்தாம் தலைமுறை ஸ்டெல்த் போர் விமானங்களை உருவாக்கியுள்ளன. இந்திய பாதுகாப்பு நிபுணர்களின் கூற்றுப்படி, இது இந்திய விமானப்படையின் திறனை அதிகரிக்கும் பெரிய திட்டமாகும். சில தனியார் நிறுவனங்களும் இந்தத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரேயஸ் ஐயர் அதிரடி ஆட்டம்

# மும்பை அணியை துரத்தி அடித்து இறுதிக்குள் நுழைந்தது பஞ்சாப்!

அகமதாபாத், ஜுன் 03

ஸ்ரேயஸ் ஐயரின் அதிரடி ஆட்டத்தால் மும்பை அணியை வீழ்த்தி இறுதிப்போட்டிக்குள் நுழைந்தது பஞ்சாப் அணி.

18ஆவது ஐ. பி. எல். தொடர் இறுதிக் கட்டத்தை எட்டி விட்டது. முதலாவது தகுதிச்சுற்று ஆட்டத்தில் பஞ்சாப் அணியை வீழ்த்தி, பெங்களூரு அணி இறுதிப் போட்டிக்குள் நுழைந்துவிட்டது. இதையடுத்து இறுதிப் போட்டிக்கு முன்னேறும் 2ஆவது அணி எது? என்பதை நிர்ணயிக்கும் தகுதி சுற்று 2 ஆட்டத்தில் பஞ்சாப் கிங்ஸ் - மும்பை இந்தியன்ஸ் அணிகள் நேற்று முன்தினம் மோதின.

மழை பெய்ததன் காரணமாக ஆட்டத்தை தொடங்குவதில் தாமதம் ஏற்பட்டது. இதனால் 07.30 மணியளவில் தொடங்க வேண்டிய ஆட்டம் 02.15 மணி நேரம் தாமதமாக தொடங்கியது. ஓவர்கள் எதுவும் குறைக்கப்படவில்லை.

இதையடுத்து மும்பை அணி முதலாவதாக துடுப்பாட்டம் செய்தது. அந்த அணியின் தொடக்க வீரர்களாக ரோஹித் சர்மா, ஜானி பேர்ஸ்டோ களமிறங்கினர். இதில் ரோஹித் சர்மா 8 ஓட்டங்களில் வெளியேறிய நிலையில், அடுத்து வந்த திலக் வர்மாவுடன் பேர்ஸ்டோ ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடி சற்று நிதானமாக ஆடி ஓட்டங்கள் சேகரிப்பில் ஈடுபட்டது.

இதில் பேர்ஸ்டோ 38 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். மறுபுறம் அதிரடியாக விளையாடிய திலக் வர்மா 29 பந்துகளில் 44 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார். அணித் தலைவர் ஹர்த்திக் பாண்டியா 15 ஓட்டங்களில் வெளியேறினார்.

அதிரடியாக விளையாடி அரைச்சதம் நோக்கி முன்னேறிய சூர்யகுமார் யாதவ் 44 ஓட்டங்கள் எடுத்த நிலையில் நேஹல் வதேரா பந்துவீச்சில் விக்கெட்டை பறிகொடுத்தார். நமன் திர் 18 பந்துகளில் 37 ஓட்டங்கள் குவித்து ஆட்டமிழந்தார். இறுதியில் மும்பை இந்தியன்ஸ் அணி 20 ஓவர்களில் 6 விக்கெட்கள் இழப்புக்கு 203 ஓட்டங்கள் எடுத்தது. இதையடுத்து 204 ஓட்டங்கள் என்ற இலக்கை நோக்கி பஞ்சாப் அணி விளையாடியது.

தொடக்க ஆட்டக்காரராக களமிறங்கிய பிரப்சிம்ரன் சிங் 6 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அடுத்த விக்கெட்டுக்கு ஜோஷ் இங்கிலிஸ் களமிறங்கினார். மற்றொரு தொடக்க வீரர் பிரியான்ஷ் ஆர்யா 20 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். இதையடுத்து அணித் தலைவர் ஸ்ரேயஸ் ஐயருடன் ஜோஷ் இங்கிலிஸ் ஜோடி சேர்ந்தார்.




5 பௌண்ட்ரிகள், 2 சிக்ஸர்களுடன் 38 ஓட்டங்கள் சேர்ந்த ஜோஷ் இங்கிலிஸ், ஹர்த்திக் பாண்டியா வீசிய பந்தை தூக்கி அடிக்க முயன்று ஆட்டமிழந்தார். இதையடுத்து நேஹல் வதேரா - ஸ்ரேயஸ் ஐயர் ஜோடி ஒன்று சேர்ந்து மும்பை அணியின் பந்துவீச்சை நாலாபுறமும் சிதறடித்தது.

அரைச்சதம் நோக்கி முன்னேறிய நேஹல் வதேரா 48 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். மறுபுறம் ஸ்ரேயஸ் ஐயர் 27 பந்துகளில் அரைச்சதம் கடந்தார். ஷஷாங்க் சிங் 2 ஓட்டங்களில் வெளியேறினார். இறுதிவரை நிலைத்து நின்று அதிரடி காட்டிய ஸ்ரேயஸ் ஐயர் 41 பந்துகளில் (5 பௌண்ட்ரிகள், 8 சிக்ஸர்கள்) 87 ஓட்டங்கள் விளாசினார்.

இறுதியில் பஞ்சாப் அணி 19 ஓவர்களில் 5 விக்கெட்கள் இழப்புக்கு 207 ஓட்டங்கள் குவித்தது. மும்பை அணியில் அஸ்வினி குமார் 2 விக்கெட்களும் ஹர்த்திக் பாண்டியா மற்றும் டிரெண்ட் போல்ட் தலா ஒரு விக்கெட்டும் வீழ்த்தினர். இந்த வெற்றியின் மூலம் மும்பை அணியை வீழ்த்தி பஞ்சாப் அணி இறுதிப்போட்டிக்குள் நுழைந்தது. இன்று நடைபெறும் ஐ. பி. எல். 2025 இறுதிப்போட்டியில் பஞ்சாப் கிங்ஸ் அணியுடன் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரு அணி மோதுகிறது. (எ)

நோர்வே கிளாசிக்கல் செஸ்:

# கார்ல்சனை வீழ்த்திய இந்திய வீரர் குகேஷ்

ஸ்டாவஞ்சர், ஜுன் 03

நோர்வே கிளாசிக்கல் செஸ் போட்டியில் இந்திய வீரர் குகேஷ் கார்ல்சனை வீழ்த்தினார்.


இந்த வெற்றியின் மூலம் புள்ளிப் பட்டியலில் குகேஷ் 3ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளார்.

நோர்வே கிளாசிக்கல் சர்வதேச செஸ் போட்டி அங்குள்ள ஸ்டாவஞ்சர் நகரில் நடைபெற்று வருகிறது. இதில் ஓபின் பிரிவில் நடப்பு உலக சம்பியன் குகேஷ் (இந்தியா), 5 முறை உலக சம்பியனான மாக்னஸ் கார்ல்சன் (நோர்வே), அர்ஜுன் எரிகைசி (இந்தியா) உட்பட 6 வீரர்கள் பங்கேற்றுள்ளனர். இதில் ஒவ்வொரு வீரரும் மற்றவர்களுடன் தலா இரண்டு முறை மோத வேண்டும்.

இந்த நிலையில், நேற்று நடைபெற்ற 6ஆவது சுற்று ஆட்டத்தில் நோர்வேயின் கார்ல்சனை இந்தியாவின் குகேஷ் எதிர்கொண்டார். உலகின் நம்பர் 1 செஸ் வீரராக உள்ள கார்ல்சனுக்கும் உலக செஸ் சம்பியன் குகேஷுக்கும் இடையேயான ஆட்டம் மிகுந்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தியது.

பரபரப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில் கார்ல்சனை 3-0 என்ற கணக்கில் வீழ்த்தி குகேஷ் அபார வெற்றிபெற்றார். இந்தத் தொடரில் இரு வீரர்களும் மோதிய முதல் ஆட்டத்தில் கார்ல்சன் வெற்றிபெற்ற நிலையில் இந்த ஆட்டத்தில் குகேஷ் வெற்றிபெற்றுள்ளார்.

இந்த வெற்றியின் மூலம் நோர்வே கிளாசிக்கல் சர்வதேச செஸ் புள்ளிப் பட்டியலில் 8.5 புள்ளிகளுடன் குகேஷ் 3ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளார். இதே வேளை, 9. 5 புள்ளிகளுடன் கார்ல்சன் 2ஆவது இடத்தில் உள்ளார். (எ)




# 3ஆவது ரி -20 போட்டியிலும் பாகிஸ்தான் அணி வெற்றி

## பங்களாதேஷ் அணி பரிதாபம்

லாகூர், ஜுன் 03

பங்களாதேஷ் அணிக்கு எதிரான ரி - 20 தொடரை பாகிஸ்தான் அணி 3 - 0 என முழுமையாக கைப்பற்றியது.

பங்களாதேஷ் கிரிக்கெட் அணி பாகிஸ்தானில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 போட்டிகள் கொண்ட ரி - 20 தொடரில் விளையாடியது. இதில் முதல் இரு ஆட்டங்களில் பாகிஸ்தான் வெற்றி பெற்று தொடரை ஏற்கனவே கைப்பற்றி விட்டது. இந்த நிலையில், இரு அணிகளுக்கும் இடையிலான 3ஆவது மற்றும் கடைசி ரி - 20 போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 20 ஓவர்களில் 6 விக்கெட்களை இழந்து 196 ஓட்டங்கள் எடுத்தது. அந்த அணி தரப்பில் அதிகபட்சமாக பர்வேஸ் ஹொசைன் எமோன் 66 ஓட்டங்கள் எடுத்தார். தொடர்ந்து 197 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய பாகிஸ்தான் 17. 2 ஓவர்களில் 3 விக்கெட்களை மட்டும் இழந்து 197 ஓட்டங்கள் எடுத்து 7 விக்கெட்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

பாகிஸ்தான் தரப்பில் முகமது ஹாரிஸ் சதம் (107 ஓட்டங்கள்) அடித்து அசத்தினார். இந்த வெற்றியின் மூலம் பாகிஸ்தான் அணி ரி - 20 தொடரை 3-0 என முழுமையாக கைப்பற்றியது. (எ)


# பிரெஞ்ச் ஓபின் ரென்னிஸ்: காலிறுதியில் சபலெங்கா

பாரிஸ், ஜுன் 03

பிரெஞ்ச் ஓபின் ரென்னிஸ் தொடரின் காலிறுதிக்கு அரினா சபலெங்கா முன்னேறியுள்ளார்.

கிராண்ட்ஸ்லாம் அந்தஸ்து பெற்ற பிரெஞ்ச் ஓபின் ரென்னிஸ் தொடர் பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் நடைபெற்று வருகிறது. இந்தத் தொடரில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் நேற்று நடைபெற்ற 4ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் பெலாரஸ் வீராங்கனை அரினா சபலெங்கா, அமெரிக்க வீராங்கனை அமெண்டா அனிசிமோவா உடன் மோதினார்.

விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில் அரினா சபலெங்கா 7-5, 6-3 என்ற செற் கணக்கில் அமெண்டா அனிசிமோவாவை வீழ்த்தி காலிறுதிக்கு முன்னேறினார். நாளை நடைபெறும் காலிறுதியில் சபலெங்கா சீனாவின் குயின்வென் ஜெங் உடன் மோதவுள்ளார். (எ)



# இன்று இறுதிப் போட்டி

அகமதாபாத், ஜுன் 03

இன்று நடைபெறும் ஐ. பி. எல். இறுதிப்போட்டியில் பஞ்சாப் கிங்ஸ் - பெங்களூரு அணிகள் மோதவுள்ளன.

ஐ.பி.எல். தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற 2ஆவது தகுதிச்சுற்று ஆட்டத்தில் ஹர்த்திக் தலைமையிலான மும்பை மற்றும் ஸ்ரேயஸ் ஐயர் தலைமையிலான பஞ்சாப் கிங்ஸ் அணிகள் மோதின. இதில், பஞ்சாப் அணி வெற்றி பெற்று இறுதிப்போட்டிக்கு முன்னேறியது.

இந்த நிலையில், பஞ்சாப் அணியை இறுதிப்போட்டிக்கு அழைத்து சென்றதன் மூலம் ஸ்ரேயஸ் ஐயர் வரலாற்று சாதனை ஒன்றை நிகழ்த்தியுள்ளார். அதாவது, ஐ. பி. எல். வரலாற்றில் மூன்று வெவ்வேறு அணிகளை இறுதிப்போட்டிக்குள் அழைத்து சென்ற ஒரே அணித் தலைவர் என்ற சாதனையை அவர் படைத்துள்ளார்.

கடந்த 2020ஆம் ஆண்டு டில்லி அணியையும் 2024 ஆம் ஆண்டு கொல்கத்தா அணியையும் நடப்பு சீசனில் பஞ்சாப் அணியையும் ஸ்ரேயஸ் ஐயர் இறுதிப்போட்டிக்கு அழைத்து சென்றுள்ளார். வேறு எந்த அணித் தலைவரும் இந்த சாதனையை இதுவரை படைத்ததில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

# வில்லியர்ஸின் சாதனையை முறியடித்தார் சூர்யகுமார்

அகமதாபாத், ஜுன் 03

ஏபிடி வில்லியர்ஸின் சாதனையை சூர்யகுமார் யாதவ் முறியடித்துள்ளார்.

சூர்யகுமார் யாதவ் ஐ. பி. எல். தொடரில் வில்லியர்ஸின் 9 ஆண்டு கால சாதனை ஒன்றை முறியடித்து அசத்தியுள்ளார்.

ஐ.பி.எல். தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற 2ஆவது தகுதிச்சுற்று ஆட்டத்தில் பஞ்சாப் அணி வெற்றி பெற்றது.

மும்பை தரப்பில் சூர்யகுமார் யாதவ் 44 ஓட்டங்கள் எடுத்தார்.

இதன் மூலம் மும்பை இந்தியன்ஸ் அணியின் நட்சத்திர வீரர் சூர்யகுமார் யாதவ் ஐ. பி. எல் தொடரில் டி வில்லியர்ஸின் 9 ஆண்டு கால சாதனை ஒன்றை முறியடித்து அசத்தியுள்ளார். இதன்படி குறித்த போட்டியில் சூர்யகுமார் யாதவ் 15 ஓட்டங்களை கடந்த போது, ஐ.பி.எல் தொடர் வரலாற்றில் ஒரு சீசனில் அதிக ஓட்டங்களைக் குவித்த தொடக்க வீரர் அல்லாத ஒருவர் என்ற சாதனையைப் படைத்துள்ளார்.

முன்னதாக கடந்த 2016ஆம் ஆண்டு பெங்களூரு அணிக்காக விளையாடிய டி வில்லியர்ஸ் 687 ஓட்டங்களைக் குவித்ததே இதுநாள் வரை சாதனையாக இருந்தது. நடப்பு ஐ.பி.எல் தொடரில் சூர்யகுமார் யாதவ் 15 இன்னிங்ஸ்களில் விளையாடி 5 அரைச்சதங்கள் மற்றும் 65. 18 என்ற சராசரியுடன் 717 ஓட்டங்களைச் சேர்த்து புதிய சாதனை படைத்துள்ளார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் மக்கள்...

வாய்ந்த ஒரு சுயாட்சி அரசியல் ஆட்சி முறையைப் பெற்றுக் கொள்வதற்கு உரித்துடையது என்ற யதார்த்தத்தின் அடிப்படையிலும், இந்த இலக்கினை அடைவதற்கு தமிழ்த் தேசத்தினால் தொடர்ந்து நிராகரிக்கப்பட்டு வந்திருக்கும் ஒற்றையாட்சி எனப்படும் அரசியல் ஆட்சி முறையின் எந்தவொரு ஏற்பாட்டின் கீழும் அறவே இடமில்லை என்பதுடன் பூரண சுயாட்சி அதிகாரம் கொண்ட அரசு ஒன்றினை, தமிழ்த் தேசத்தின் மரபுவழித் தாயகத்தில், இலங்கைத் தீவு என்ற யாதார்த்த ரீதியான வரையறைக்குள் ஏற்படுத்துவதற்கு, ஒற்றுமையாகவும் உறுதியாகவும் பாடுபட நாம் தீர்மானித்துள்ளோம் என்பதையும் பிரகடனப்படுத்துகின்றோம்.

இலங்கைத் தீவில் இனப்பிரச்னைக்கு நிலையானதும் நீதியானதுமான அரசியல் தீர்வு என்பது ஒரு புதிய அரசியல் சாசனத்தை திட்டவட்டமானதும் தெளிவானதுமான முறையில் உள்ளடக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுவதற்கு ஏதுவாக, தமிழ்த் தேசத்தின் அரசியல் ஒற்றுமையை தமிழ்த் தேசிய சக்திகள் அனைத்தையும் ஒருங்கிணைத்து ஏற்படுத்தவேண்டும் என்ற நோக்கில், இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் தமிழ்த் தேசியப் பேரவைக்கும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணிக்கும் இடையில் பின்வரும் அம்சங்களை உள்ளடக்கி ஏற்படுத்தப்படுகின்றது.

1. தமிழ் மக்களின் பிறப்புரிமையான சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலும் தமிழ்த் தேசத்தின் இறைமையின் பாற்பட்டும் வடக்கு - கிழக்கு மாகாணங்களை உள்ளடக்கிய மரபுவழித் தாயகத்தில், ஒரு பூரணமான சம்ஷ்டி ஆட்சி முறை, அரசியல்சாசன ரீதியாக ஏற்படுத்தப்படுவதே தமிழ்த் தேசத்தின் இறைமையை ஏற்பதாகவும் தியாகம் செறிந்ததுமான நீண்ட விடுதலைப் போராட்டத்தின் அர்த்தமுள்ள அங்கீகாரமாகவும் இருக்க முடியும் என்பதை நாங்கள் வலியுறுத்தி நிற்கின்றோம்.

மேலும் தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட எமது முஸ்லிம் சகோதரர்களின் உரிமைகளையும் அபிலாசைகளையும் நிலைநிறுத்தும் விதத்தில் அரசியல் சாசன ரீதியானவையும், வலுவானவையுமான அரசியல் நிர்வாக ஏற்பாடுகள், முஸ்லிம் சமூகத்தின் சம்மதத்துடனும் இணக்கப்பாட்டுடனும் ஏற்படுத்தப்படவேண்டும் என்பதையும் நாங்கள் வலியுறுத்துகின்றோம்.

2. அரசியல் யாப்பிற்கான 13 ஆவது திருத்தம் என்பது தமிழ்த் தேசிய இனப் பிரச்னைக்கான முழுமையானதோ இறுதியானதோ தீர்வு அல்ல என்பதனைச் சுட்டிக்காட்டுகின்றோம்.

3. கடந்த 2015 ஆம் ஆண்டு பதவிக்கு வந்த அரசாங்கத்தின் அரசியல் நிர்ணய சபையினால் உருவாக்கப்பட்ட அரசியல் சாசன வரைபு என்பது, ஒற்றையாட்சிக்கு உட்பட்டது என்ற காரணத்தால் தமிழ்த் தேசத்தின் சுயாட்சிக்கு இடமளிக்கப்படவில்லை என்ற அடிப்படையில் அதனை நாங்கள் ஏற்கனவே நிராகரித்துள்ளோம் என்பதனை இரு தரப்பினரும் வெளிப்படுத்துகின்றோம்.

4. போரின் போதும் அதற்குப் பின்னும் இழைக்கப்பட்ட மற்றும் இழைக்கப்பட்டுக்கொண்டிருக்கும் இனப்படுகொலை, யுத்தக் குற்றங்கள் மற்றும் மனித குலத்திற்கெதிரான குற்றங்கள் தொடர்பில், உள்ளக பொறிமுறைகளை முழுமையாக நிராகரித்துச் சர்வதேசக் குற்றவியல் விசாரணை ஒன்று அவசியமானது என்பதனை இரு தரப்பினரும் வெளிப்படுத்துகின்றோம்.

5. இந்த இலட்சியப் பயணத்தில் தமிழ் தேசத்தின் நலனை விரும்பும் சகல தமிழ்த் தேசிய சக்திகளும் நேர்மையாகவும், விரைவாகவும் இணைத்துக் கொள்ளப்படுவதற்குச் சாத்தியமான சகல முயற்சிகளும் எடுக்கப்படவேண்டும் என்பதையும் நாம் வலியுறுத்துகின்றோம்.

6. இந்த அடிப்படையில் பிரதிநிதித்துவ ஆட்சி முறை ஒன்றின் கீழ் கிடைக்கும் சகல சந்தர்ப்பங்களையும் வாய்ப்புகளையும், தமிழ்த் தேசியம் சார்ந்து நேர்மையாக செயற்படும் சக்திகள் ஒன்றிணைந்து பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதையும், அதே நேரத்தில் இலங்கைக்கு வெளியே வாழ்ந்துகொண்டிருக்கும் புலம் பெயர் ஈழத் தமிழர்கள் மற்றும் பரந்த தமிழர் சமுதாயத்தின் பல்வேறு தரப்பினரதும் ஒருமித்த ஆதரவு பெற்றுக்கொள்ளப்படவேண்டும் என்றும் நாங்கள் விரும்புகிறோம். இந்த அடிப்படையில் இந்த முயற்சிகளுக்கு எமது மக்கள் அனைவரினதும் ஆதரவையும் ஒத்துழைப்பையும், பங்களிப்பையும் நாங்கள் நாடி நிற்கின்றோம்.

7. தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை வலியுறுத்துவதிலும் அரசியல் சாசன ரீதியாக அவற்றை நிலைநாட்டிக் கொள்வதிலும் தமிழ் மக்கள் நேர்மையாகவும் உறுதியாகவும் தொடர்ந்து செயல்பட்டு வந்துள்ளனர். தமிழ் மக்களின் முழுமையான அபிலாசைகளைப் பூர்த்தி செய்யும் முகமாக எதிர்காலத்தில் நேர்மையுடனும் கொள்கை உறுதியுடனும் தமிழர் தேசத்தின் அரசியல் செயல்பாடு தொடர்ந்து முன்னெடுக்கப்பட வேண்டும். இதற்காக ஏற்கனவே பல்வேறு தமிழ்த் தேசியக் கட்சிகளும் வெகுசன அமைப்புகளும் ஒருங்கிணைந்து, மக்களின் பங்கேற்புடன் தயாரித்து 2016 ம் ஆண்டு ஏப்ரல் 10ஆம் நாள் வெளியிடப்பட்ட தீர்வுத் திட்டத்தை அடிப்படையாகக் கொள்ளமுடியும் என நாம் கருதுகின்றோம்.

8. இந்தக் குறிக்கோளை ஜனநாயக ரீதியான செயற்பாடுகளாலும்,மக்கள் எழுச்சியினாலுமே சாதிக்க முடியும் என்பதை நாங்கள் வலியுறுத்தி, ஒரு பரந்த ஜனநாயக அரசியல் கட்டமைப்பாகவும், இந்த இலக்கினை முன்வைத்து சகல தமிழ்த் தேசிய சக்திகளையும் ஒன்றிணைத்துச் சாத்தியமான விதத்தில் ஐக்கியத்தை ஏற்படுத்துவதற்கும், அதை முன்னெடுத்துச் செல்வதற்கும் எமது மக்களின் ஆதரவை நாடிநிற்கின்றோம்.

9. இப்புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிடும் இரண்டு தரப்பினரும் எதிர்காலத்தில் தமிழ் மக்களின் விடுதலை கருதி ஓரணியாகச் செயல்படுவோம் என்பதனையும் வெளிப்படுத்துகிறோம்.

என குறித்த ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதை ஏற்று தமிழ் தேசிய பேரவையின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் , ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியின் செயலாளர் நாகலிங்கம் இரட்ணலிங்கம் ஆகியோர் கைச்சாத்து இட்டனர். (அ)

## கொழும்பு மாநகர...

பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பொய் மற்றும் வெறுப்பை முன்னிலைப்படுத்தி ஆட்சிக்கு வந்தது. அரசாங்கத்தின் உண்மை தன்மையை மக்கள் ஆறு மாத காலத்துக்குள் விளங்கிக்கொண்டார்கள். இதனால் அரசாங்கம் 23 இலட்சம் வாக்குகளை இழந்தது. இதனால்தான் அரசாங்கம் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் அமோக வெற்றிபெறவில்லை.

கொழும்பு மாநகர சபையில் யார் ஆட்சி அமைப்பது என்பது இழுபறி நிலையில் உள்ளது. ஊழலை இல்லா தொழிப்பதாக குறிப்பிட்டுக்கொண்டு ஆட்சிக்கு வந்த அரசாங்கம் உறுப்பினர்களை விலைக்கு வாங்கி கொழும்பு மாநகர சபையில் ஆட்சி அமைக்க முயற்சிக்கிறது.

கொழும்பு மாநகர சபையில் ஆட்சி அமைப்பதற்கு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி ஏனைய எதிர்க்கட்சிகளின் ஆதரவை கோரியது. ஆனால், ஆட்சி அமைப்பதற்கான சிறந்த திட்டங்களை முன்வைக்கவில்லை. ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய தேசிய கட்சி ஆகிய கட்சிகள் முன்மொழியும் மேயர் வேட்பாளருக்கு நாங்கள் ஆதரவு வழங்கப் போவதில்லை-என்றார். (அ)

## 1,469...

தெரிவிக்கப்பட்டுள்ளது.

இடியுடன் கூடிய மழை, பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்களால் ஏற்படக்கூடிய ஆபத்துக்கள் தொடர்பில் பொது மக்கள் அவதானத்துடன் செயற்படுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். (அ)

## கொழும்பு...

விமான சேவையானது, மீண்டும் டேவிட் பீரிஸ் விமான சேவை நிறுவனத்தின் மூலம் இலங்கை விமான சேவைகள் அதிகார சபைக்கு விண்ணப்பிக்கபட்ட விண்ணப்பத்தை பரிசீலிக்கும் முகமாக தகுதி காண் சேவை இடம்பெற்றது.

இந்த சேவையின் மூலம் 11 பயணிகள் பயணம் செய்ய முடியும் என்பதுடன் ஒரு மணித்தியாலம் 10 நிமிடங்களில் இரத்மலானையை சென்றடைய எதிர்பார்க்கப்படுகின்றது. (அ)

## பதவி ஆசை...

விவசாயிகளுக்கு பிரச்னை எனில் குரல் கொடுக்கும் அவரசில்வாதிகளும் அரச அதிகாரிகளும் மீனவர்கள் தொடர்ந்தும் பாதிக்கப்படும்போது கண்டுகொள்ளாமலிருக்கின்றனர்.

தற்போது கடலில் ஒளிபாய்ச்சி மீன்பிடித்தல், சுருக்குவலை மற்றும் கடலட்டை தொழில்கள் அதிகரித்துள்ளன. அதனை மீன்பிடி அமைச்சரோ, கடற்படையோ அல்லது நீரியல் வளத்துறையோ கண்டுகொள்வதில்லை.

முல்லைத்தீவில், கடற்படை அதிகமான சட்டவிரோத தொழிலாளர்கள், எல்லை தாண்டிய இந்திய மீனவர்களை கைது செய்து வருகிறது. யாழ்ப்பாணத்தில் தற்போது அதிகமான சட்டவிரோத தொழில்கள் இடம் பெற்றுவருகின்றன.

அவற்றுக்கு எதிராக ஏந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படுவதில்லை. உரியவர்கள் உரிய கவனமெடுத்து மீனவர்கள் பிரச்னைக்கு தீர்வு காண நடவடிக்கை எடுக்கவேண்டும்-என்றார். (அ)

## வடக்கு, கிழக்கு...

கண்ணிவெடி ஆலோசனைக் குழு மற்றும் ஹலோ அறக்கட்டளையுடன் அடிமட்ட மனித பாதுகாப்பு திட்டங்களுக்கான உதவி திட்டத்தின் கீழ் இரண்டு கண்ணிவெடி அகற்றும் திட்டங்களுக்கான மானிய ஒப்பந்தங்களில் அதன் பொறுப்பாளர் கமோசீடா கடந்த 30ஆம் திகதி கையெழுத்திட்டார்.

மக் மற்றும் ஹலோ ட்ரஸ்டின் இந்தத் திட்டங்கள் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மொத்தம் 13 ஆயிரம் பயனாளிகளுக்கு மீள்குடியேற்றம் மற்றும் மேம்பட்ட வாழ்வாதார உதவிக்கு பங்களிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

உள்நாட்டு யுத்ததால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் அபிவிருத்தி இலங்கைக்கான ஜப்பானின் உத்தியோகபூர்வ அபிவிருத்தி உதவி முன்னுரிமைப் பகுதிகளில் ஒன்றாகும்.

இலங்கையில் அமைதியை கட்டியெழுப்புதல், மீள்குடியேற்றம் மற்றும் நிலையான வளர்ச்சியை நோக்கிய ஓர் அடிப்படை படியாக கண்ணிவெடி அகற்றலை ஜப்பான் கருதுகிறது என்று கமோசீடா வலியுறுத்தினார். ஜப்பானின் தொடர்ச்சியான ஆதரவுக்கான வலுவான உறுதிப்பாட்டை அவர் மீண்டும் உறுதிப்படுத்தினார், மேலும், 2027ஆம் ஆண்டுக்குள் இலங்கை கண்ணிவெடி பாதிப்பு இல்லாத நாடாக மாறும் என்றும், இது நீடித்த அமைதி மற்றும் நல்லிணக்கத்துக்கு வழி வகுக்கும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார். (அ)

## தேர்தல்...

அவர் மேலும் குறிப்பிடுகையில்-

தமக்கு பெரும்பான்மை இல்லாவிட்டாலும் சகல உள்ளூராட்சி மன்றங்களிலும் ஆட்சியமைப்போம் என்று அரசாங்கம் ஆணவ பேச்சு பேசியது. ஆனால், தேர்தல் ஆணைக்குழு வெளியிட்டுள்ள வர்த்தமானி அறிவித்தல்களுக்கமைய 161 சபைகளில் மாத்திரமே அரசாங்கத்துக்கு ஆட்சியமைக்க முடிந்துள்ளது. எஞ்சியுள்ள 178 சபைகளில் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களின் வாக்கெடுப்பின் மூலமே ஆட்சியமைக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது -என்றார். (அ)

## பாலி...

மன்னார் - முல்லைத்தீவு குறுக்காக பாயும் பாலி ஆற்றை மறித்து யாழ்ப்பாண குடிதண்ணீர் தேவையை பூர்த்தி செய்யும் முகமாக கடந்த அரசாங்கத்தினால் இந்தத் திட்டத்துக்காக நிதி ஒதுக்கப்பட்டது.

இந்த திட்டத்தை எமது அரசாங்கம் நிறுத்துவதற்கான எந்த ஒரு முடிவையும் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் எடுக்கவில்லை.

கடந்த அரசாங்கங்களில் ஆரம்பிக்கப்பட்ட திட்டங்கள் பல அரசியல் நோக்கங்கள் கருதி ஆரம்பிக்கப்பட்ட திட்டங்களாக பார்க்கப்படுகின்ற நிலையில், பாலி ஆற்றுத் திட்டம் மக்களுக்கு நன்மை பயக்குமானால் அதனை நமது அரசாங்கம் முன்னோக்கி கொண்டு செல்லும்.

குறித்த திட்டத்தை மேற்கொள்வதற்கு வன வளத் திணைக்களம் இடையூறாக அமையாது ஏனெனில் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படுகின்ற திட்டங்கள் மக்கள் நலன் சார்ந்த திட்டங்களாகவே அமையும் .

ஆகவே, தற்போது உள்ள சூழலில் பாலி ஆற்றுத் திட்டத்தினை எமது அரசாங்கம் நிறுத்துவதற்கு தீர்மானம் மேற்கொள்ளவில்லை - என்றார். (அ)

## எரிபொருளில்...

சென்றது உண்மையெனில், இன்று அது யாருடைய சட்டைப் பைக்குள் செல்கிறது என பொதுஜன பெரமுனவின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பிரேம்நாத் சி தொலவத்த கேள்வியெழுப்பினார்.

கொழும்பில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்-

கடந்த அரசாங்கத்தில் எரிபொருட்களால் கிடைக்கும் இலாபத்தில் ஒரு பகுதி அப்போதைய அமைச்சர் காஞ்சன விஜேசேகரவின் சட்டைப் பைகளுக்குள் செல்வதாக தேசிய மக்கள் சக்தி குற்றஞ் சுமத்தியது. ஆனால் இன்று உலக சந்தையில் எரிபொருள் விலை குறைவடைந்துள்ளபோதிலும், இலங்கையில் விலைகளில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை. அவ்வாறெனில் இப்போது கிடைக்கும் இலாபம் யாருடைய சட்டைப் பைக்குள் செல்கிறது?

அன்று உண்மையைக் கூறியிருந்தால், இன்று அரசாங்கத்துக்கு இந்த நிலைமை ஏற்பட்டிருக்காது. அன்றைய அரசாங்கத்தில் முக்கிய பதவிகளில் இருந்தவர்கள் தான் இன்றும் இந்த அரசாங்கத்துக்கு உதவுகின்றனர். அமெரிக்க வரி விதிப்பு தொடர்பான பேச்சுகளில் நிதி அமைச்சின் செயலாளர் மகிந்த சிறிவர்தனவே பங்கேற்கிறார்.

தமது ஆட்சியில் சிறையில் அடைக்கப்படுவார்கள் எனக் கூறிய நிதி அமைச்சின் செயலாளரும், மத்திய வங்கி ஆளுநரும் இன்றி இந்த அரசாங்கத்தால் எந்த தீர்மானத்தையும் எடுக்க முடியாது. அன்று கூறிய பொய்களால்தான் இன்று இந்த அரசாங்கம் ஸ்தம்பித்து போயிருக்கிறது. அரசாங்கத்தின் அழிவு வெகு தொலைவில் இல்லை-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## கொழும்பு மாநகர சபையில் அரசாங்கம் ஆட்சி அமைக்கும்

### பிரதியமைச்சர் சதுரங்க அபேசிங்க



கொழும்பு, ஜூன் 03

எதிர்வரும் வாரங்களில் கொழும்பு மாநகர சபையின் ஆட்சியை அமைக்கவுள்ளதாக கைத்தொழில் மற்றும் முயற்சியாண்மை பிரதியமைச்சர் சதுரங்க அபேசிங்க தெரிவித்துள்ளார்.

கடுவெல மாநகர மேயரின் சத்திய பிரமாண நிகழ்வில் கலந்து கொண்டதன் பின்னர், ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-தேசிய மக்கள் சக்தி 230 உள்ளூராட்சி மன்றங்களில் வெற்றி பெற்றுள்ளது.

வெற்றி பெற்ற அனைத்து பிரதேச சபைகளிலும், நகர சபைகளிலும் ஆட்சியை அமைப்போம்.

ஏதிர்வரும் வாரங்களில் கொழும்பு மாநகர சபையின் ஆட்சியை அமைக்கவுள்ளோம்.

இந்த விடயத்தில் ஏனைய கட்சிகளுக்கு நாங்கள் இடையூறை ஏற்படுத்தப்போவதில்லை.

கொழும்பு மாநகர சபையை பொறுத்த வரையில் எதிர்க்கட்சிகள் இன்னும் உறுப்பினர்களை தெரிவு செய்யாது தடுமாறி வருகிறது.

இந்த வாரத்தில் எதிர்க்கட்சிகள் அங்கத்தவர்களை தெரிவு செய்யாவிடின் அது தொடர்பான தீர்மானத்தை ஆணையாளர் மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்படும்- என்றார். (அ)

## ரவி கருணாநாயக்கவின் மேன்முறையீடு தள்ளுபடி



கொழும்பு, ஜூன் 03

முன்னாள் நிதியமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவி கருணாநாயக்க தாக்கல் செய்த மேன்முறையீட்டை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

தனக்கு எதிரான லஞ்ச குற்றச்சாட்டுகளைத் தொடர அனுமதித்த உயர் நீதிமன்றத்தின் இடைக்கால உத்தரவை எதிர்க்க அவருக்கு எந்த உரிமையும் இல்லை என்று தீர்ப்பளித்துள்ளது.

மேன்முறையீடு செய்வதற்கான உரிமை தானாகவே வராது, ஆனால் சட்டத்தால் வெளிப்படையாக வழங்கப்படவேண்டும் என்று உயர் நீதிமன்றம் தனது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளது.

2016 பெப்ரவரி மற்றும் செப்ரெம்பர் மாதங்களுக்கு இடையில் ரூ. 11 மில்லியனுக்கும் அதிகமான வாடகை செலுத்துதல்கள் மற்றும் சலுகைகள் தொடர்பாக கருணாநாயக்க மற்றும் தொழிலதிபர் அர்ஜூன் அலோசியஸ் ஆகியோர் மீது இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துரைகளைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு குற்றப் பத்திரிகை தாக்கல் செய்தது.

அரசியலமைப்பில் முரண்பட்ட வரையறைகள் காரணமாக ஓர் அமைச்சரவை அமைச்சர் மீது இலஞ்ச ஒழிப்புச் சட்டத்தின் கீழ் வழக்குத் தொடர முடியாது என்று குற்றம் சாட்டப்பட்டவர்கள் வாதிட்டனர். இந்த ஆட்சேபனையை உயர் நீதிமன்றம் நிராகரித்தது, மேலும் கருணாநாயக்க அந்த முடிவை எதிர்த்து மேன்முறையீடு செய்ய முயன்றார்.

இருப்பினும், குற்றம் சாட்டப்பட்டவர் தண்டனை பெற்ற பின்னரே மேன்முறையீடு செய்ய முடியும் என்றும் இடைக்கால உத்தரவுகளுக்கு எதிராக மேன்முறையீடு செய்ய முடியாது என்றும் உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

முந்தைய மேன்முறையீட்டில் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துரைகளைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் ஒரு தரப்பாகக் குறிப்பிடத் தவறியது சட்டபூர்வமாக குறைபாடுடையது என்றும் அது குறிப்பிட்டது.

மேன்முறையீட்டை தள்ளுபடி செய்த உயர்நீதிமன்றம் ரூ. 100,000 வழக்கு செலவுகளை செலுத்தவும் உத்தரவிட்டது. (அ)

# இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் பிமலுக்கு எதிராக முறைப்பாடு!

### உதய கம்மன்பில தரப்பினால்

கொழும்பு, ஜூன் 03

**தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் அமைச்சர் பிமல் ரட்நாயக்கவுக்கு எதிராக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. உதய கம்மன்பில தலைமையிலான பிவிதுரு ஹெல உறுமய கட்சியினால் இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.**

கடந்த ஜனவரி மாதம் 17 ஆம், 18ஆம் திகதிகளில் சிவப்பு லேபிள்கள் கொண்ட 323 கொள்கலன்கள் எவ்வித பரிசோதனையும் இன்றி துறைமுகத்தில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளது என கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

சுங்கப் பரிசோதனைகளை நடத்தாது அந்தக் கொள்கலன்களை விடுவிக்குமாறு தற்போதைய அரசாங்கத்தின் அமைச்சர் பிமல் ரட்நாயக்க உத்தரவிட்டிருந்தார் எனவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இதன் மூலம் அமைச்சர் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்துள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த கொள்கலன்களில் ஆயுதங்கள், வெடிபொருட்கள், தரம் குறைந்த மருந்துகள், ஆபத்தான பொருட்கள் இருந்திருக்கலாம் என சுங்கத் திணைக்கள தொழிற்சங்கங்கள் அண்மையில் சகுற்றம் சுமத்தியிருந்ததாக பிவிதுரு ஹெல உறுமய கட்சி தெரிவித்துள்ளது.

இந்த கொள்கலன்களில் ஆயுதங்கள் மற்றும் வெடிபொருட்கள் இருந்திருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்துள்ளதாக அது சுட்டிக்காட்டியுள்ளது.ஜனவரி மாதத்திலிருந்து நாட்டில் அதிக எண்ணிக்கையிலான துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பதிவாகிள்ளதாகவும் இந்த கொள்கலன்களிலிருந்து கொண்டுவரப்பட்ட ஆயுதங்களினால் தாக்குதல் நடத்தப்பட்டதா என்ற சந்தேகம் எழுவதாகவும் அது தெரிவித்துள்ளது.

சட்டவிரோதமான முறையில் கொள்கலன்களை விடுவிக்குமாறு உத்தரவிட்ட அமைச்சருக்கு எதிராக விசாரணைகள் நடத்தப்பட வேண்டுமென கட்சி கோரிக்கை விடுத்துள்ளது. (அ)

## அமைச்சரவை மாற்றம் உண்மைக்கு புறம்பானது

### அமைச்சர் சாவித்திரி போல்ராஜ்

கொழும்பு, ஜூன் 03

அமைச்சரவை மாற்றம் ஏற்படப்போவதாக கூறப்படும் கருத்துக்கள் உண்மைக்கு புறம்பானவை என மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் தெரிவித்துள்ளார்.

டான் தமிழ் ஒளியில் ஒளிபரப்பாகும் நேர்கொண்ட பார்வை நிகழ்ச்சியில் தொகுப்பாளரால் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்தபோதே அவர் இதனை தெரிவித்துள்ளார். (அ)

## மின்சார சட்டமூலததுக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல்

கொழும்பு, ஜூன் 03

அரசாங்கத்தால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட மின்சார சட்டமூலத்தின் சில சரத்துக்கள் அரசமைப்புக்கு முரணானது என்று தீர்ப்பளிக்கக் கோரி இலங்கை மின்சார சபையின் பொறியியாளர்கள் சங்கம் தாக்கல் செய்த மனுவை எதிர்வரும் 6 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்வதாக உயர் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

இந்த மனு நேற்று நீதிபதிகளான ஏ. எச். எம். டி. நவாஸ், அர்ஜூன ஒபேசேகர மற்றும் பிரியந்த பெர்னாண்டோ ஆகிய மூவர் அடங்கிய நீதிபதிகள் முன்னிலையில் விசா ரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே இவ்வாறு உத்தரவிடப்பட்டது. (அ)

## ஸ்டார்லிங்க் இணைய சேவை அறிமுக பணி இறுதிக்கட்டத்தில்

கொழும்பு, ஜூன் 03

எலான் மஸ்க்கின் ஸ்டார்லிங்க் செயற்கைக்கோள் இணைய சேவைகளை இலங்கையில் அறிமுகப்படுத்தும் பணிகள் இறுதிக் கட்டத்தில் உள்ளன.

இதற்கு தேவையான அனைத்து அரசாங்க ஒப்புதல்களும் ஒழுங்கு முறை செயல்முறைகளும் இப் போது நிறைவடைந்துள்ளன என்று டிஜிற்றல் பொருளாதார பிரதி அமைச்சர் எரங்க வீரரத்ன உறுதிப் படுத்தினார்.

இலங்கையில் அதன் செயல்பாட்டுத் தொடக்கத்தைத் தொடர ஸ்டார்லிங்கிலிருந்து இறுதிக்கட்ட நடவடிக்கைக்காக அரசாங்கம் காத்திருக்கிறது என்றும் அந்தப் பணிகள் நிறைவு பெற்றதும் சேவைகள் தாமதமின்றி தொடங்கப்படும் என்று அவர் கூறினார்.

2025 ஆம் ஆண்டுக்கான ஆசிய தொழில்நுட்ப உச்சி மாநாட்டின் ஒரு பகுதியாக சிங்கப்பூரில் நடைபெற்ற உயர்மட்டக் கூட்டத்தின் போது இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டது. (அ)

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 16 | 03 |
| 10 | 06 |
| 1944 | 2022 |



### அமரர் சின்னையா தங்கராஜா

(ஓய்வுநிலை உத்தியோகத்தர், ஹற்றன் நஷனல் வங்கி)

### உயிர் தந்தவனின் உயிர் பிரிந்த நாள்

கண்களில் மிடுக்குடன்
அமைதியின் சிகரமாய்
கண்டிப்பின் காவலனாய்
கற்றவன் எனும் கர்வத்துடன்
அறத்தின் வழியில்
கட்டுப்பாட்டுடன் வாழ்ந்து
பாசத்தை மனதில் வைத்து
எம் உயர்வுக்காய் உழைத்த தந்தையே!

எளிமையை உடையாக அணிந்தீர்
கல்வியைக் கனவாகக் கொண்டீர்
திருக்குறளை வாழ்க்கை பாடமாக்கினீர்
மனைவி, பிள்ளைகளை வரமாக பெற்றீர்
ஆசைகள், ஆடம்பரங்களை துறந்தீர்

உங்கள் சிரிப்பு
உங்கள் அமைதி
உங்கள் கண்டிப்பு
உங்கள் கட்டுப்பாடு
உங்கள் அறிவுரைகள்
உங்கள் நேர்மை
உங்கள் ஒழுங்குமுறைகள்
எல்லாமே எம் வாழ்வில் ஒளிரும் நட்சத்திரங்கள்
நீங்கள் விதைத்த நல் எண்ணங்கள்
என்றும் எங்கள் வாழ்வின் வெற்றிகள்

உம் கடன் தீர்த்து உம் கடமை இனிதே நிறைவேற்றி
சென்றீரே... உம் நினைவுகளை விட்டு
உங்கள் நினைவுகள் நீங்கள் வாழ்ந்ததை போலவே
எம்மோடு உயிரோடு வாழ்கின்றன
உருகுகிறதே உள்ளம் உமையிழந்து துயரத்தால்
உருண்டோடிப் போனதுவோ... மூன்றாண்டுகள் இன்று
காலங்கள் கடந்தாலும் உங்கள் இழப்பு
தந்த வெற்றிடம் அப்படியே...
இழந்து விடக்கூடாத சொத்து அப்பா!!!

பிரிவால் துயருறும்
பிள்ளைகள்

முகவரி
இல. 60, பழைய பூங்கா வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 03.06.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.